

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 133 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 7 – சனிக்கிழமை 23 டிசம்பர் 2023 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 133 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 7 - Saturday 23 December 2023 - Madurai 12 Pages ₹ 5.00



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அதி கனமழையால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட திருநெல்வேலிக்கு நேற்று முன்தினம் (21.12.2023) நேரில் சென்று ஆய்வு மேற்கொண்ட போது, திருநெல்வேலி பெரியார் பேருந்து நிலைய சந்திப்பில், நிவாரண உதவிகள் வழங்கிய நிகழ்வின் போது ஆட்டோ ஓட்டுநர் பாலசுப்பிரமணியம் அவர்களின் இரண்டாம் வகுப்பு பயிலும் மகள் செல்வி சேவிதா பகவதி தனது உண்டியல் சேமிப்பு பணத்தை நிவாரணப் பணிகளுக்காக வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அதிகனமழையால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட திருநெல்வேலிக்கு நேற்று முன்தினம் (21.12.2023) நேரில் சென்று, முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களிடம் அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்து கேட்டறிந்து, அவர்களுக்கு அரிசி, வேஷ்டி, சேலை, போர்வை,பாய், பிஸ்கெட் மற்றும் ரொட்டி, பால் பவுடர், தண்ணீர் பாட்டில் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். உடன் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சா. ஞானதிரவியம், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் வஹாப், ரூபி மனோகரன், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம். சரவணன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கா.ப.கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## கடுமையான மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் தூத்துக்குடி, நெல்லை, குமரி, தென்காசி மாவட்டங்களுக்கு

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நிவாரண உதவிகள் அறிவித்தார்!

## மீட்புப் பணிகளை துரிதப்படுத்திட நடவடிக்கை!

நெல்லை,டிச.23–

**தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மிகக் கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக 6 ஆயிரம் ரூபாயாக வழங்கப்படும். இம்மா வட்டங்களில் உள்ள இதர வட்டங்களுக்கும் மற்றும் கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு அங்குள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1000 ரூபாய் வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.12.2023) திருநெல்வேலியில் மழை வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பின்போது அறிவித்தார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் அளித்த பேட்டி வருமாறு:–

இம்மாத தொடக்கத்தில், வரலாறு காணாத மழையை சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் சந்தித்ததைப் போல, நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களும் சந்தித்துள்ளது. சென்னையைச் சுற்றியுள்ள மாவட்ட மக்களைக் காத்ததைப் போல, தூத்துக்குடி மற்றும் நெல்லையைச் சுற்றியிருக்கக்கூடிய மாவட்ட மக்களையும் தமிழ்நாடு அரசு காக்கும் என்ற உறுதியை நான் முதலில் அளிக்கிறேன்.

கடுமையான மழைப் பொழிவு 17 மற்றும் 18 தேதிகளில் ஏற்படும் என்பதை சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் 17ஆம் தேதி அறிவித்தது.

வானிலை ஆராய்ச்சி மையம் சொன்ன மழை அளவுகளுக்கு பல மடங்கு அதிகமாக மழைப் பொழிவு இருந்தது. இதனால் இந்த மாவட்டங்களில் வரலாற்றில் இதுவரை பதியப்படாத அளவுக்கு மழை பெய்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, காயல்பட்டினத்தில் 94 சென்டி மீட்டர் மழை. அந்தப் பகுதியே வெள்ளக்காடானது. ஓராண்டில் பெய்ய வேண்டிய மழை ஒரே நாளில் கொட்டி தீர்த்ததை எல்லாம் நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

### 1871 ஆம் ஆண்டிற்குப் பிறகு அதிக மழை!

ஒருசில இடங்களில், 1871ஆம் ஆண்டுக்குப் பிறகு, அதிக மழை பெய்துள்ளது. அதன்காரணமாக, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களின் பல வட்டங்களில் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தாமிரபரணி ஆற்றிலும், அதனைச் சுற்றியிருக்கக்கூடிய பகுதிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால் ஸ்ரீவைகுண்டம், ஏரல், தூத்துக்குடி நகரங்களில் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது.

வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கை நமக்கு சற்றே தாமதமாக கிடைத்தாலும், அதில் அளித்துள்ள அளவை விட அதிகமாக மழை பொழிவு ஏற்பட்ட சூழ்நிலையிலும், தமிழ்நாடு அரசு முன்கூட்டியே பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

மழைப்பொழிவு கடுமையான உடனேயே 10 அமைச்சர்கள், 10 இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் அங்கே மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மாவட்ட வாரியாக, இந்திய காவல் பணி அதிகாரிகள் மீட்பு மற்றும் கண்காணிப்பு பணிகளில் நியமிக்கப்பட்டார்கள். அருகிலுள்ள மாவட்டங்களில் இருந்து தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையின் வீரர்கள், படகுகள், உபகரணங்கள், 375 வீரர்கள் கொண்ட தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 15 குழுக்கள், 275 வீரர்கள் கொண்ட தேசிய பேரிடர் மீட்பு படையின் 10 குழுக்கள் களத்தில் நிவாரணப்பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

### கூடுதலாக மீட்புப் பணிகள் விரைவுபடுத்த நடவடிக்கை!

கூடுதலாக, மீட்பு பணிகளை விரைவுபடுத்த தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையில் பயிற்சி பெற்ற 230 பேர் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். இதுமட்டுமின்றி, நமது இராணுவ வீரர்கள் 168 பேர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

முன்னெச்சரிக்கையாக, இதுவரை 12 ஆயிரத்து 653 பேர் மீட்கப்பட்டு, 141 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, உணவு, குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அளிக்கப்பட்டு வருகிறது. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஹெலிகாப்டர் மூலம் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த பெருமழையினையும், அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும், நடைபெறும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளையும், நானும், தலைமைச் செயலாளர் அவர்களும் பலமுறை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி வாயிலாகவும், தொலைபேசி வாயிலாகவும் அவ்வப்போது கண்காணித்து வருகிறோம்.

### பிரதமரிடம் - முதல் கட்டமாக ரூ. 2000 கோடி கேட்டுள்ளேன்!

கடந்த 19ஆம் தேதியன்று இரவு பிரதமர் நரேந்திர மோடி அவர்களை புது தில்லியில் சந்தித்து, தமிழ்நாட்டில் நிகழ்ந்துள்ள இரண்டு பெரிய வெள்ள பாதிப்புகளுக்குத் தேவைப்படும் நிதியினை தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்கிடக் கோரிக்கை மனுவை அளித்துள்ளேன். தென் மாவட்டத்துக்கு மட்டும் 2000 கோடி ரூபாயை முதல் கட்டமாக வழங்க வேண்டும் என்று கேட்டுள்ளேன்.

தூத்துக்குடி மாவட்டத்தில், நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுடன் ‘வீடியோ கால்’மூலமாக முகாம்களில் அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், வழங்கப்படும் உணவு மற்றும் மருத்துவ உதவிகள் குறித்தும் கேட்டறிந்தேன்.

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர்களுடனும், இங்கிருந்து பணியாற்றி வரும் அதிகாரிகளுடனும் காணொலி வாயிலாக தகவல்களைக் கேட்டறிந்தேன்.

நிவாரண மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும், மருத்துவ உதவிகளையும் குறைவின்றி செய்து கொடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தி இருக்கிறேன்.

சென்றடைய முடியாத நிலையில் இருக்கக்கூடிய கிராமங்களில் உள்ள மக்களின் நிலை மற்றும் அவர்களை மீட்கப்படக்கூடிய அந்த அவசர பணி குறித்தும், என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பது குறித்தும் கேட்டறிந்து, அந்தப் பணிகளை விரைவுப்படுத்தவும் கேட்டுக் கொண்டேன்.

### மீட்புப் பணிகளை துரிதப்படுத்தியுள்ளேன்!

தண்ணீர் சூழ்ந்துள்ள கிராமங்களில் சிக்கியுள்ள மக்களுக்கு உணவு வழங்கல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும், மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைச்சர் பெருமக்கள் மற்றும் அதிகாரிகள் அனைவரையும் கேட்டுக் கொண்டேன். தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஏற்பட்ட

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### “நெல்லை , தூத்துக்குடி - ரூ. 6000! தென்காசி, கன்னியாகுமரி - ரூ. 1000!

**அதி கனமழையின் காரணமாக, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மிகக் கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக 6 ஆயிரம் ரூபாயாக வழங்கப்படும்.**

**இந்த மாவட்டங்களில் உள்ள இதர வட்டங்களுக்கும் மற்றும் கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு அங்குள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1000 ரூபாய் வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.”**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதி கனமழையால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட திருநெல்வேலிக்கு நேற்று முன்தினம் (21.12.2023) நேரில் சென்று மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை ஆய்வு செய்த பிறகு, செய்தியாளர்களை சந்தித்தார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 23-12-2023

# ஒருங்கிணைப்பு இல்லையா?

“எரிகிற வீட்டில் எடுத்தது வரை லாபம்” - என்று தமிழில் இருக்கும் பழமொழிக்குப் பொருத்தமானவர் ஒருவர் உண்டென்றால் அது தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என்.ரவிதான். இயற்கைப் பேரிடர் காலத்திலும் தமிழ்நாடு அரசுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தி வருகிறார். தொல்லை தரும் வகையில் செயல்பட்டு வருகிறார்.

**4 ஆம் தேதி புயல் - மழை ஏற்பட்டது என்றால் 7 - 8 ஆம் தேதிக்குள் இயல்பு வாழ்க்கையை முழுமையாக வழங்கி விட்டோம். வீட்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் என்பதை நிவாரணத் தொகையாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, அதனையும் நான்கு மாவட்ட மக்கள் பெறத் தொடங்கிவிட்டார்கள். இவை அனைத்தும் தி.மு.க. அரசுக்கும், குறிப்பாக முதலமைச்சர் அவர்களுக்கும் மிகப்பெரிய நற்பெயரை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. இதனை தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பொறாமை, வஞ்சகக் குணம் கொண்ட அவர், 19 ஆம் தேதி ராஜ்பவனுக்கு ஒன்றிய பாதுகாப்புப் படையின் அதிகாரிகளை அழைத்து ஆலோசனை நடத்தி இருக்கிறார். எவ்வளவு வேகமாக ஆளுநர் செயல்பட்டுள்ளார் பார்த்தீர்களா?**

**டிசம்பர் 4 ஆம் தேதி அடித்த புயலுக்கான ஆலோசனைக் கூட்டத்தை டிசம்பர் 19ஆம் தேதி நடத்தி இருக்கிறார். ஆளுநர் ரவிக்காக, புயல் சென்னையில் காத்திருந்தால் என்ன ஆகி இருக்கும்? மக்கள் மத்தியில் நற்பெயர் எடுத்துள்ள தமிழ்நாடு அரசின் பெயரைக் கெடுக்கும் வாய்ப்பாக இந்தக் கூட்டத்தை ஆளுநர் நடத்தி இருக்கிறார். இது தொடர்பாக ஆளுநர் மாளிகை விடுத்துள்ள பத்திரிக்கைச் செய்தியானது, கெட்ட எண்ணம் கொண்டதாக அமைந்திருக்கிறது.**

போதிய ஒருங்கிணைப்பு இல்லை - என்று யாரோ சொன்னதாக அந்த பத்திரிக்கைச் செய்தி சொல்கிறது. தலைநகரைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்பைப் போல தென் மாவட்டங்களிலும் பாதிப்பு ஏற்பட்ட நாளன்று **- ஒன்றிய பாதுகாப்புப் படையினரை அழைத்து இப்படி ஒரு கூட்டத்தைக் கூட்டி குழப்பத்தை ஏற்படுத்திய ஆளுநர், அந்த பாதுகாப்புப் படையினரைச் செயல்பட விடாமல் சதி செய்திருக்கிறார்.** தான் ஏதோ மாநிலத்தின் அதிபரைப் போல ஆர்.என்.ரவி நினைத்துக் கொள்கிறார்.

14.9.2023 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் இக்கூட்டம் நடைபெற்றது. வடகிழக்குப் பருவ மழையை எதிர்கொள்வது குறித்த ஆலோசனைக் கூட்டம் இது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் உயரதிகாரிகள் அனைவரும் கலந்து கொண்டார்கள். அவர்களோடு இந்திய ராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். விமானப்படை, கடற்படை அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். கடலோரக் காவல் படை அதிகாரிகளும் வந்திருந்தார்கள். இந்திய வானிலை ஆய்வு மைய அதிகாரிகளும், ஒன்றிய நீர்வள ஆணைய அதிகாரிகளும், தேசிய பேரிடர் மீட்புப் படை அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். இதுதான் ஒருங்கிணைப்பு என்பது. இந்தக் கூட்டம் நடந்த தேதி 14.9.2023. அதாவது கடந்த செப்டம்பர் 14 ஆம் தேதியே ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தி விட்டது தமிழ்நாடு அரசு.

19.9.2023 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டம் நடந்த தேதியையும் கவனித்தால்தான் எவ்வளவு முன்கூட்டியே திட்டமிட்டுள்ளார்கள் என்பது தெரியும்.

இப்போது பெய்த மழை என்பது வானிலை ஆய்வு மையத்தாலேயே கணிக்க முடியாததாக இருந்தது. வரலாற்றில் இதுவரை இல்லை என்று சொல்லத்தக்க வகையில் மாபெரும் இயற்கைப் பேரிடரைச் சந்தித்தது தமிழ்நாடு.

புயல் - மழைக்கு முன்பு அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் -மழை, வெள்ளத்துக்குப் பிறகு அரசு எடுத்த நிவாரண நடவடிக்கைகளும் சேர்ந்து மாபெரும் சேதத்தைத் தவிர்த்தது. இல்லாவிட்டால் மிகப்பெரிய சேதம் ஏற்பட்டு இருக்கும்.

**ஒருங்கிணைப்பு இல்லாவிட்டால் பெரும் சேதம் ஏற்பட்டு இருக்குமே? ஒருங்கிணைப்பு இல்லாவிட்டால் நூற்றுக்கணக்கான உயிரிழப்புகள்கூட ஏற்பட்டு இருக்குமே? ஒருங்கிணைந்து செயல்பட்டதால்தானே ஒன்றியக் குழுவும் தமிழ்நாடு அரசைப் பாராட்டியது!**

“அதிகப்படியான தண்ணீர் தேங்கக் காரணம், கடல் மட்டம் உயர்ந்து தண்ணீரை உள்ளே விடாமல் எதிர்த்தது என்பதை நான் அறிவேன்” என்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களே, தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்களிடம் சொன்னார்களே. டெல்லியில் இருந்த பிரதமருக்குத் தெரிந்தது, கிண்டியில் இருக்கும் ஆளுநருக்குத் தெரியவில்லை.

**தென் மாவட்டக் களத்தில் 10 அமைச்சர்கள் - 10 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், ஐ.பி.எஸ். அதிகாரிகள் - 10 ஆயிரம் அரசு ஊழியர்கள்- தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையின் வீரர்கள், படகுகள், உபகரணங்கள் - 375 வீரர்கள் கொண்ட தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 15 குழுக்கள்- 275 வீரர்கள் கொண்ட தேசிய பேரிடர் மீட்புப் படையின் 10 குழுக்கள் - கூடுதலாக தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையில் பயிற்சி பெற்ற 230பேர் - இராணுவ வீரர்கள் 168 பேர் இருந்தார்களே; இவர்களை அனுப்பி வைத்ததும் முதலமைச்சர்தானே? முதலமைச்சருக்குத் தெரியாமல் ‘அரூப உருவம்’ அனுப்பியதாக நினைக்கிறாரா ஆளுநர்?**

விமானப்படையின் 4 ஹெலிகாப்டர்கள், கடற்படையின் 2 ஹெலிகாப்டர்கள் மற்றம் கடலோரக் காவல் படையின் 2 ஹெலிகாப்டர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. யார் சொல்லி வந்தார்கள் இவர்கள்? முதலமைச்சர் சொல்லித் தானே?

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்குக் கூடுதல் ஹெலிகாப்டர்கள் தேவைப்படுவதால், அதிகபட்ச அளவில் ஹெலிகாப்டர்களை அனுப்பி வைக்க வேண்டும் என்று ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி, அவரும் அனுப்பி வைத்தாரே? அதையாவது கிண்டியார் அறிவாரா?

உச்சநீதிமன்றம் இவரது உச்சந்தலையில் பலமுறை கொட்டிய பிறகும் அவர் திருந்துவதாகத் தெரியவில்லை.

**இவ்வளவு நல்லெண்ணமும் அக்கறையும் இருந்திருக்குமானால், பாதிக்கப் பட்ட மக்களுக்கான நிவாரணத் தொகையை ஒன்றிய அரசிடம் இருந்து வாங்கித் தருவதில் ஆர்.என்.ரவி ஆர்வம் செலுத்த வேண்டும். அதை விட்டுவிட்டு, இயற்கைப் பேரிடர் நேரத்தில் தனது இழிசிந்தனைகளை அரங்கேற்றப் பார்க்கக் கூடாது.**



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராயபுரம் மண்டலம், வார்டு–57க்குட்பட்ட யானைக்கவுனி பாலச் சாலையில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பால கட்டுமானப் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்னான், தென்னக இரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங், இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இரயில்வே துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## திருவைகுண்டம் பகுதியில்

# 20 லாரிகளில் 20 பஞ்சாயத்துகளுக்கு நிவாரணப் பொருட்கள்!

## அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்!

தூத்துக்குடி, டிச.23-

கனமழையினால் பாதிக்கப்பட்ட, தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம், அதனைச் சுற்றியுள்ள பொது மக்களுக்கு, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேரில் சென்று நிவாரண பொருட்கள் வழங்கினார்.

அதிகனமழையினால், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்கள் மழைநீரால் சூழப்பட்டு கடுமையாகப் பாதிக்கப்பட்டன. மின்சாரம், போக்குவரத்துகள், அத்தியாவசிய பொருட்கள் கூட வாங்க இயலாத நிலை ஏற்பட்டு, தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில், மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. தற்போது படிப்படியாக மழைநீர் வடிந்து வரும் நிலையில், சில இடங்களில் மழைநீர் மோட்டர் மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படியும், அமைச்சர்கள் குழு பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று, பொதுமக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கி வருகின்றனர்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று முன்தினம் (21.12.2023) பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து நிவாரணப் பொருட்கள் வழங்கினார்.

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள 50 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் அரிசி, பருப்பு, கோதுமை, பால், பிஸ்கெட், உணவு பொட்டலங்கள், குடிதண்ணீர் பாட்டில், பாய் மற்றும் போர்வை வழங்குவதற்கு, அமைச்சர் அவர்களின், அறிவுறுத்தலின்படி, நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

### சாலைகள் ஆய்வு!

திருச்செந்தூர், பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், தென்காசி, குற்றாலம், செங்கோட்டை செல்லும் சாலையில் மழைநீரால் ஏற்பட்டுள்ள போக்குவரத்துப் பாதிப்பையும், சேதமடைந்த சாலைகளையும், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார். அப்போது, போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ள சாலையை உடனடியாக சீர்செய்யுமாறு மற்றும் சாலைகளில் தேங்கி இருக்கும் மழைநீரை அகற்றுமாறு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அறிவுறுத்தினர். அதன் தொடர்ச்சியாக சாலைகள் உடனடியாக செப்பனிடும் பணி நடைப்பெற்று வருகிறது.

திருவைகுண்டம் அரசு மருத்துவமனை மற்றும் திருவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆகிய இடங்களில் மழைநீர் அகற்றும் பணி நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது. அமைச்சர், மழைநீர் அகற்றப்பட்டு விட்டதா என்பதையும், ஆய்வு மேற்கொண்டார்.

திருவைகுண்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதி மக்களுக்கு நேரடியாகச் சென்று, பொது மக்களுக்குப் பால் பாக்கெட்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து புளியங்குடி கிராம மக்கள் அமைச்சர் அவர்களிடம், கிராமத்தை கடந்து செல்லும் பாலத்தை சீரமைத்து தரவும், வாய்க்காலை தூர் வாரவும் கோரிக்கை விடுத்தனர். அமைச்சர் அவர்கள் அக்கோரிக்கைகளை ஏற்று, அப்பணிகளை மேற்கொள்ள அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

### அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!

பின்னர் அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தூத்துக்குடி மாவட்டம், கடைகோடியில் இருக்க கூடிய ஸ்ரீவைகுண்டம் பகுதி மழைநீரால் சூழப்பட்டு, பல கிராமங்களுக்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டது என்றும், அரசின் சார்பாக பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட, மூன்று நாட்களாக தொடர்ந்து



ஒவ்வொரு பகுதியாக சென்றுக் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வந்ததை எடுத்துரைத்தார். சாலைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை தற்காலிகமாக சீர் செய்யப்பட்ட விபரங்களையும், குறிப்பாக ஸ்ரீவைகுண்டம்புதுக்கோட்டை சாலையில் மழைநீர் வடிந்து இருந்ததால், ஜே.சி.பி. இயந்திரம் மூலம் சாலையை சீர்செய்யப் பட்டு வருவதையும் விரிவாக எடுத்துரைத்தார்.

திருவைகுண்டம், ஆழ்வார்திருநகரி ஆகிய இரண்டு ஒன்றியத்திற்கும் அதிகாரிகளையும் மற்றும் சாலைப் பணியாளர்களையும் நியமித்து, நிவாரண முகாம்களில் சமையல் செய்யும் இடங்களுக்கு, அரிசி, பருப்பு, காய்கறிகள், பால், பிஸ்கெட், பிரட், கோதுமை, ரவா ஆகிய நிவாரணப் பொருட்கள் இரண்டு லாரிகளில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

### 20 லாரிகளில் பொருட்கள் அனுப்பிவைப்பு!

மேலும், இன்றைய தினத்தில் இருந்து, காலை 20 பஞ்சாயத்துகள், மாலையில் 20 பஞ்சயாத்துகள் என்று பிரித்து, 20 அதிகாரிகளை நேரிடையாக நியமித்தார். அவர்கள் மூலமாக, அரிசி, பருப்பு, கோதுமை, ரவா, சர்க்கரை, பிஸ்கெட், பிரட் மற்றும் குடிதண்ணீர் பாட்டில் போன்ற அத்தியாசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பாக தயார் செய்து, 20 லாரிகளில், 20 பஞ்சாயத்துகளுக்கு காலையிலும், மாலையிலும் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்தார்.

சாலைகளைப் பொறுத்த வரையில், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள், மாவட்ட இதரச் சாலைகள் போன்ற சாலைகளை செப்பனிட, நான்கு கண்காணிப்புப் பொறியாளர்கள் நியமிக்கப்பட்டு, பணிகள் விரைவாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், அமைச்சர் அவர்கள், நெடுஞ்சாலைத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளரும் மற்றும் அப்பகுதி சட்டமன்ற உறுப்பினர், தலைமைப் பொறியாளர்கள் ஆகியோருடன் இணைந்து, ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கும் மீட்பு பணிகள், பராமரிப்புப் பணிகள், நிவாரணப் பணிகள் ஆகிய பணிகள் சரியாக நடைபெற்று வருகிறதா என்பதை அமைச்சர் ஆய்வு செய்து வருவதையும் விளக்கி கூறினார்.

அமைச்சருடன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர், பொதுப்பணித்துறை சிறப்பு அலுவலர் இரா. விஸ்வநாத், மற்றும் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுடன் சென்று, நிவாரணப் பணிகளை செயல்படுத்துவதில் பேருதவி புரிந்தார்கள்.



## பிரதமரிடம் நேரில் மனு அளித்தும் – கடும் பேரிடர்களாக அறிவித்து

# ஒன்றிய அரசு இதுவரை உரிய நிவாரணம் அறிவிக்கவில்லை!

## நெல்லையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

நெல்லை, டிச. 23 -

**“டெல்லியில் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து மனு அளித்தும் கடும் பேரிடர்களாக அறிவித்து ஒன்றிய அரசு இதுவரை உரிய நிவாரணத்தை அறிவிக் கவில்லை” என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் நெல்லையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.**

*முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:-*

**செய்தியாளர்** *:- ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு குறித்து ஆளுநர் தெரிவித்தது பற்றி...*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** ஆளுநர் வாரத்திற்கு ஒருமுறை டில்லிக்கு சென்று வருகிறார். அப்படி போகும்போது தயவு செய்து டில்லியில் வாதாடி, போராடி தேவையான நிதியை வாங்கிக் கொடுத்தால் அவர்களுக்கு நாங்கள் நன்றி கடன் பட்டிருப்போம்.

**செய்தியாளர்** *:- ஒன்றிய அரசால் கொடுக்கப்பட்ட நிதி போதுமான தாக இல்லை.... இதுவரை ஒன்றிய அரசிடம் இருந்து நிதி உடனே கிடைக்கும். ஆனால் இந்த மழை வெள்ளத்திற்கு இதுவரையில் நிதி எதுவும் அறிவிக்கவில்லையே?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** ஒரு நீண்ட விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது. அதுவும் சொல்லிக்கொள்கிறேன். நல்ல கேள்வி கேட்டிருக்கிறீர்கள். நான் எதிர் பார்த்திருந்த கேள்வி அது. ஒன்றிய அரசின் நிதிப் பங்களிப்பைப் பற்றி விளக்கம் சொல்கிறேன். இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் செலவுகளை சமாளிப்பதற்காக ஒவ்வொரு மாநிலத்திற்கும் மாநில பேரிடர் நிவாரண நிதி (SDRF) என்ற நிதி உள்ளது. எந்தெந்த மாநிலத்திற்கு இந்த நிதி எவ்வளவு என்பதை ஐந்தாண்டு காலத்திற்கு ஒருமுறை ஒன்றிய அரசால் நியமிக்கப் படும் நிதிக் குழு (Finance Commission) தீர்மானிக்கிறது. இதன்படி, தமிழ்நாட்டினுடைய SDRFக்கு ஒவ்வொரு ஆண்டும் ஒதுக் கப்பட்டுள்ள நிதி 1,200 கோடி ரூபாய் ஆகும்.

இதில் 75 விழுக்காட்டை, அதாவது 900 கோடி ரூபாயை ஒன்றிய அரசு தர வேண்டும். 25 விழுக்காட்டை, அதாவது 300 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு ஏற்றிடவேண்டும். ஒன்றிய அரசின் பங்கானது ஆண்டுதோறும் இரு தவணைகளில் நமக்கு அளிக்கப்படுகின்றது. அதாவது இரண்டு தடவை தலா 450 கோடி ரூபாய் நமக்கு அளிக்கப்படும். ஒரு இயற்கைப் பேரிடரின் தாக்கம் மிகக் கடுமையாக இருக்கும்போது இந்த SDRF நிதி போதவில்லை என்றால், அந்த இயற்கைப் பேரிடரைக் கடும் இயற்கைப் பேரிடராக அறிவித்து தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (NDRF) கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

**இன்று வரை கூடுதல் நிதி அறிவிக்கப்படவில்லை!**

சென்னையில் ஏற்பட்ட பெருவெள்ளத் தையும், தற்போது தென் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத வெள்ளத் தையும், இவ்வாறு கடும் பேரிடர்களாக அறிவித்து NDRFல் இருந்து கூடுதல் நிதி ஒதுக்கிட வேண்டும் என்றுதான் நாங்கள் பலமுறை கோரிக்கை வைத்துள்ளோம். இதைத் தான் நானும் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்தபோதும் வலியுறுத்தி குறிப்பிட்டி ருக்கிறேன். மனுவாகவும் கொடுத்திருக்கிறேன். ஆனால் இன்று வரை இந்த இரண்டு பேரிடர்களும் கடும் பேரிடர்களாக அறிவிக்கப்படவில்லை.

**NDRFஇல் இருந்து இதுவரை நமக்கு கூடுதல் நிதி எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஒன்றிய அரசிடமிருந்து நமக்கு வந்த 450 கோடி ரூபாய் நிதி என்பது இந்த ஆண்டு நமது SDRFக்கு ஒன்றிய அரசு அளிக்க வேண்டிய இரண்டாவது தவணை தானே தவிர, கூடுதல் நிதி அல்ல.**

NDRFஇல் இருந்து இதுவரை நமக்கு கூடுதல் நிதி எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஒன்றிய அரசிட மிருந்து நமக்கு வந்த 450 கோடி ரூபாய் நிதி என்பது இந்த ஆண்டு நமது SDRFக்கு ஒன்றிய அரசு அளிக்க வேண்டிய இரண்டாவது தவணை தானே தவிர, கூடுதல் நிதி அல்ல.

சவாலான நிதிநிலைச் சூழல் இருக்கும் போதிலும், ஒன்றிய அரசு இந்தக் கூடுதல் நிதி தராத போதிலும், மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மாநில அரசு நிதியைச் செலவிட்டு நிவாரணப் பணிகளை மேற் கொண்டு வருகின்றோம். சென்னையில் நிவாரண உதவிக்கும் மீட்புப் பணிகளுக்கும் 1500 கோடி ரூபாய்க்குக் கூடுதலாக செலவிடப்பட்டுள்ளது. நான் இன்று இங்கு அறிவித்துள்ள நிவாரண உதவிகளுக்கும், பணிகளுக்கும் 500 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. இதுமட்டுமின்றி, சேத மடைந்துள்ள சாலைகள், பாலங்கள், குடிநீர்த் திட்டங்கள், மருத்துவமனைகள், பல்வேறு கட்டடங்கள் போன்றவற்றை சீரமைப்ப தற்கும் பெரும் நிதி தேவைப்படும்.

**வெள்ளப் பெருக்குப் பற்றி முன்னெச்சரிக்கை குறுஞ்செய்தி!**

எனவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் அதே நேரத்தில், இந்த வெள்ளத்தால் சேதமடைந்துள்ள பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை குறிப்பாக சாலைகள், மருத்துவ மனைகள், பாலங்கள், மின்கட்டமைப்புகள் ஆகியவற்றை சீர்செய்யும் பணிக்காக தமிழ்நாடு அரசு உடனடி முன்பணமாக மாநில பேரிடர் மேலாண்மை நிதியி லிருந்து 250 கோடி ரூபாயை விடுவிக்க ஆணையிட்டுள்ளேன். அதோடு மேலும் தாமதமின்றி இந்த இரண்டு பேரிடர்களையும் கடும் பேரிடர்களாக அறிவித்து ஒன்றிய அரசு NDRFஇல் இருந்து கோரப்பட் டுள்ள நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று தமிழ்நாட்டின் சார்பிலும் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும் நான் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

**செய்தியாளர்:** *அணைகளிலிருந்து அதிக அளவு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது குறித்து....*

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** அணையின் இருப்பை பொறுத்தமட்டில் முதல் நாளிலிருந்து எவ்வளவு கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படு கிறது என்பதை நாங்கள் அறிவித்துக் கொண்டிருந்தோம். 45,000 கனஅடி தண்ணீர் வருகிற போது, இது 1 இலட்சத்தை தொடும் என்பதையும், வெள்ளப் பெருக்கு வருகிறது என்பதை நாங்கள் குறுஞ்செய்தி மூலமாக அனைவருக்கும் முன்னரே தெரிவித்திருக்கிறோம். அதற்குப்பிறகு இரவு கடுமையாக, தொடர்ச்சியாக மழை வருகிறபோது 1 இலட்சம் கனஅடி அளவிற்கு தண்ணீர் வருகிறது. நாம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்த காரணத்தினால்தான் தாமிரபரணி ஆற்றின் கரையோரத்தில் இருக்கக்கூடியவர்களை நாங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு போயிருக்கிறோம். நீங்கள் குறிப்பிடுவதைப்போல, குற்றச்சாட்டு யார் வேண்டுமானாலும் சொல்லலாம், ஆனால் உண்மை நிலவரம் இதுதான்.

**முன்னறிவிப்பால் பலர் பாதுகாக்கப்பட்டனர்**

**செய்தியாளர்:** *வெள்ளப் பெருக்கு குறித்த தகவல் கொடுத்திருந்தால் வீட்டில் உள்ளவற்றை பாதுகாப்பாக வைத்திருக்க முடியும் என்கிறார்களே...*

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** நீங்கள் சொல்வதைப் போல, கரையோர மக்களுக்கு எந்தவிதமான அறிவிப்பு இல்லாமல் இருந்திருந்தால், 1,45,000 கன அடி தண்ணீர் வருகிறபோது, எவ்வளவு பெரிய உயிரிழப்பு வந்திருக்கவேண்டும். நீங்களே பாருங்கள். நாங்கள் முன்னரே அறிவித்த காரணத்தால் தான் பல பேர் பாதுகாக்கப்பட்டுள்ளனர்.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் :** 2015ல் செம்பரம்பாக்கம் ஏரியை மனதில் வைத்து நீங்கள் பேசுகிறீர்கள். அது வல்ல இது. முதலில் அதை தெரிந்துகொள்ளுங்கள்.

**தங்கம் தென்னரசு:** *நேரடியாக செய்தியாளர்கள் சந்திப்பில், முதல் நாள் இரவு அத்தனை செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கறோம். இவ்வளவு கனஅடி தண்ணீர் வரப்போ கிறது. மக்கள் பாதுகாப்பான இடங்க ளுக்கு வரவேண்டும் என்பதற்கு உங்களுடைய ஒத்துழைப்பை யும் கேட்டிருந்தோம். காவல் துறை, தீயணைப்புத்துறையினர் அங்கிருந்து பலபேரை வெளியேற்றிய காரணத்தினால் தான் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டிருக்கிறது. அதையும் மீறி சிலர் அங்கே இருந்திருக்கிறார்கள். இருந்தவர்களையும் அடுத்த நாட்களிலிருந்து உங்களுக்கு தெரியும், படகுகளை பல்வேறு இடங்களில் இருந்து கொண்டு வந்து, அவர்களை காப்பாற்றியிருக்கிறோம்.*

**செய்தியாளர்**:- *தாமிரபரணி ஆற்றின் கிளை நதிகளிலிருந்து நிறைய அணைகளை திமுக அரசு கட்டியிருக்கிறது. இப்போது ஆத்தூர் முக்காணி அருகில் ஒரு அணை கட்டுவதற்கு பொதுமக்கள் விரும்புகிறார்கள். திமுக அரசு அதை நிறைவேற்றுமா?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** அதையெல்லாம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். ஆய்வு செய்த பிறகு அதன்படி நடக்கும். நீங்கள் எதிர்பார்ப்பதுபோல எங்கெங்கு தேவைப்படுமோ அதற்குரிய நடவடிக்கை நிச்சயம் எடுக்கப்படும்.

**உடனே கவனிப்பதாக பிரதமர் தெரிவித்தார்!**

**செய்தியாளர்** *:- நேரில் பிரதமரை சந்தித்தபோது, நிவாரண நிதி சம்பந்தமாக பிரதமர் ஏதும் பதில் கூறினாரா?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்**: 20 நிமிடம் எங்களிடம் பேசினார். எல்லாவற்றையும் விவரமாக கேட்டறிந்தார். அனைத்தையும் விவரமாக சொல்லியிருக்கிறோம். பிரதமர் உடனே கவனிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

**சொல்வது யார் ?**

**செய்தியாளர்**:- *எதிர்க் கட்சித் தலைவர் குற்றம் சாட்டியிருக்கிறார், தமிழக அரசு வெள்ளப் பாதிப்புகளை சரியாக கையாளவில்லை என்று சொல்லியிருக்கிறார். தங்கள் பதில்...*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** யார்? தூத்துக்குடி மக்களைச் சுடச் சொல்லி விட்டு டிவியைப் பார்த்து தான் தெரிஞ்சுக் கிட்டேன்னு சொன்னாரே அவரா?

*இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.*

## டெல்லியில் ஆளுநர் வாதாடி, போராடி, நிதியை வாங்கிக் கொடுப்பாரா?

### நெல்லையில் – முதலமைச்சரிடம் நிவாரண நிதி வழங்கிய சிறுமி!

## ‘நெகிழ்ந்தேன்; நெஞ்சம் நிறைந்தேன்!’

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

நெல்லை, டிச. 23-

நெல்லையில் சிறுகச் சிறுகச் சேர்த்த பணத்தை - முதலமைச்சர் நிவாரண நிதிக்குக் கொடுத்த சிறுமியைக் கண்டு ‘நெகிழ்ந்தேன்; நெஞ்சம் நிறைந்தேன்’ என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் மிதத்துடன் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

**நெல்லையில் சிறுகச் சிறுகச் சேர்த்த பணத்தையும் - முதலமைச்சர் நிவாரண நிதிக்குக் கொடுத்த சிறுமி! நெகிழ்ந்தேன்; நெஞ்சம் நிறைந்தேன்! மனிதம்காப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.





ஒருங்கிணைந்த மும்பை தி.மு.க. செயலாளர் மறைந்த த.மு.பொற்கோவின் மூத்த மகன் பொ.அன்பழகன் – திருமதி சுகுணா அன்பழகன் ஆகியோரின் புதல்வி அசுவினிக்கும் சென்னையைச் சேர்ந்த தி.ச.ரமேஸ் – திருமதி கீதா ரமேஸ் ஆகியோரின் புதல்வர் பிரசாந்த் பாபுவுக்கும் மும்பை மாட்டுங்கா கிழக்குப் பகுதியில் உள்ள பயோனியர் மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. இம்மணவிழா வரவேற்பு சென்னையில் அண்ணா நகரில் அமைந்துள்ள ஐ சி எஃப் திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் திராவிடர் கழக தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் ஆகியோர் நேரில் சென்று மணமக்களை வாழ்த்தினர். மும்பை வி.சி.க. மாநகர அமைப்பாளர் எஸ்.சாலமோன்ராஜா,ஜெரிமெரி தமிழ்ச் சங்கத் தலைவர் இல.முருகன், வி.சி.க. பிரமுகர் வள்ளியூர் வீரகுமார் ஆகியோர் உடன் உள்ளனர்.



இராதாபுரம் தொகுதி – நித்தியகல்யாண சுந்தரி வெள்ளையன் செட்டியார் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அமைக்கப்பட்டு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட ‘ஸ்மார்ட் வகுப்பறை’ மற்றும் பள்ளியில் கட்டப்பட்டு வரும் புதிய கட்டுமானங்களை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பார்வையிட்டார். மேலும் – சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர்.மனோகரனின் நாங்குநேரி சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள சங்கர் ரெட்டியார் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் மேற்கொண்டார். கனமழையின் காரணமாக அப்பள்ளியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து அமைச்சர் நேரடி ஆய்வு மேற்கொண்டு, “வருங்காலங்களில் இதுபோன்ற பாதிப்புகள் இப்பள்ளியில் ஏற்படாத வகையில் நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வீர்!” என மாவட்ட கல்வி அலுவலர்களை அறிவுறுத்தினார்.

# உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 5 லட்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு... முதல் பக்கத் தொடர்ச்சி!

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள கூடுதல் ஹெலிகாப்டர்கள் அனுப்பி வைக்கக்கோரி ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களுக்கு கடிதம் எழுதினேன்.

வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்பதற்கும், உணவுப் பொருட்களை விநியோகிக்கவும் விமானப் படையின் 4 ஹெலிகாப்டர்கள், கடற்படையின் 2 ஹெலிகாப்டர்கள் மற்றும் கடலோரக் காவல் படையின் 2 ஹெலிகாப்டர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

பெருமழையின் தாக்கம் அதிகமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு கூடுதல் ஹெலிகாப்டர்கள் தேவைப் படுவதால், அதிகபட்ச அளவில் ஹெலிகாப்டர்களை அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் அவர்களும் அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

மாநில மற்றும் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினரின் பெருமுயற்சியினாலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரின் சிறந்த பங்களிப்பினாலும், வருவாய்த் துறை மற்றும் அனைத்துத் துறைகளின் ஒருங்கிணைந்த களப்பணியினாலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தேவையான நிவாரணம் அரசு வழங்கும்!**

பெருமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட வீடுகளை இழந்த மக்களுக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், கால்நடை இழப்பைச் சந்தித்திருக்கக் கூடிய மக்களுக்கும் தமிழ்நாடு அரசு தேவையான நிவாரணத்தை வழங்கும்.

**● இந்த மழை, வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு, இழப்பீட்டுத் தொகையை ரூபாய் 4 இலட்சத்திலிருந்து, 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும்;**

**● சேதமடைந்த குடிசைகளுக்காக ஏற்கனவே வழங்கப்படும் தொகை ரூபாய் 5 ஆயிரத்தினை, ரூபாய் 10 ஆயிரமாக உயர்த்தி வழங்கிடவும்;**

**● மழையினால் 33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாகப் பாதிக்கப்பட்ட நெற்பயிர் உள்ளிட்ட இறவைப் பாசனப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 13 ஆயிரத்து 500 ரூபாயிலிருந்து, 17 ஆயிரம் ரூபாயாக உயர்த்திவழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.**

**● பல்லாண்டு பயிர்கள் மற்றும் மரங்கள் 33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாகச் சேதமுற்றிருப்பின், இழப்பீடாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 18 ஆயிரம் ரூபாயிலிருந்து, 22 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும்;**

**● மழையினால் 33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாகப் பாதிக்கப்பட்ட மானாவாரிப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 7,410 ரூபாயிலிருந்து, 8,500 ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும்;**

**● 33,000 ரூபாயாக இருந்த எருது, பசு உள்ளிட்ட கால்நடைகளின் உயிரிழப்பு நிவாரணத்தை, 37,500 ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும்;**

**● 3,000 ரூபாயாக இருந்த வெள்ளாடு, செம்மறி ஆடு உயிரிழப்பு நிவாரணத்தை 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும்;**

**● சேதமடைந்த படகுகள் மற்றும் வலைகளுக்கு நிவாரண உதவிகளைப் பொறுத்தவரையில், முழுமையாக சேதமடைந்த கட்டுமரங்களுக்கு (மீன்பிடி வலைகள் உட்பட), 32,000 ரூபாயிலிருந்து, 50 ஆயிரம் ரூபாயாகவும், பகுதியாக சேதமடைந்த கட்டுமரங்களுக்கு 10 ஆயிரம் ரூபாயிலிருந்து, 15 ஆயிரம் ரூபாயாகவும், முழுவதும் சேதமடைந்த வல்லம் வகை படகுகளுக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை ரூபாய் 75 ஆயிரத்திலிருந்து, ஒரு இலட்சம் ரூபாயாகவும், முழுவதும் சேதமடைந்த இயந்திரப் படகுகளுக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை ரூபாய் 5 இலட்சத்திலிருந்து, ரூபாய் 7 லட்சத்து 50 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கிடவும், சேதமடைந்த வலைகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து, ரூபாய் 15 ஆயிரமாக உயர்த்தி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.**

**● அதி கனமழையின் காரணமாக, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மிகக் கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக 6 ஆயிரம் ரூபாயாக வழங்கப்படும்.**

**● இந்த மாவட்டங்களில் உள்ள இதர வட்டங்களுக்கும் மற்றும் கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு அங்குள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1000 ரூபாய் வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.**

அமைச்சர்களும், அதிகாரிகளும் இறுதிவரை இங்கேயே தங்கி மக்கள் காப்புப் பணிகளில் நிச்சயமாக ஈடுபட இருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.



விருதுநகரில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களின் தாயார் மறைந்த அமராவதியம்மாள் அவர்களின் உடலுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினார். உடன் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், கோ.தளபதி, தங்கப் பாண்டியன், ரெகுநாதன், ஒன்றிய செயலாளர்கள் பொன்னுத்தம்பி, முருகேஷன், முனியாண்டி, மல்லி ஆறுமுகம், விருதுநகர் நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், காரியாபட்டி செந்தில், இளைஞர் அணி கே.ஜி.ராஜகுரு, கிருஷ்ண குமார், இலக்கிய அணி மலையரசன், மதுரை வைகைப் பரமன், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் தனுஷ் கோடி, வி.பி.ராஜன், அருப்புக்கோட்டை சேர்மன் சிவப்பிரகாசம் சுந்தரலட்சுமி மற்றும் கழகத் தொண்டர்கள் அஞ்சலி செலுத்தினர்.

# சாதிய ஆதிக்க சக்திகளுக்கு எதிரான போராட்டம்!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கம்!

சென்னை, டிச. 23 -

சாதிய ஆதிக்க சக்திகளுக்கு எதிரான போராட்டம் தொடர்பாக ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:-



தீக்கதிர்

2023 டிசம்பர் 22 வெள்ளிக்கிழமை

அதிகரிக்கும் தாக்குதல்!

தீண்டாமை மற்றும் சாதி அடிப்படையிலான பாகுபாடு கூடாது. அது பெருங்குற்றம் என்கிறது சட்டம். இந்திய அரசியலமைப்பின் 17 ஆவது பிரிவு தீண்டாமையை தடை செய்கிறது. பிரிவு 15 (2) இன் படி, எந்தவொரு குடிமகனும் பொது இடங்களுக்குச் செல்லலாம். அவர்களின் உரிமைகளுக்கு கட்டுப்பாடுகள் அல்லது நிபந்தனைகளை விதிக்கக் கூடாது என்கிறது. ஆனாலும் பட்டியல் மற்றும் பட்டியல் பழங்குடி மக்களுக்கு எதிரான வன்கொடுமைகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. ஏன் இந்த நிலை?

கடந்த 9 ஆண்டுகளில் பட்டியலினத்தவர்களுக்கு எதிரான தாக்குதல் 43 விழுக்காடும், பட்டி...

தீண்டாமை மற்றும் சாதி அடிப்படையிலான பாகுபாடு கூடாது. அது பெருங்குற்றம் என்கிறது சட்டம். இந்திய அரசியலமைப்பின் 17 ஆவது பிரிவு தீண்டாமையை தடை செய்கிறது. பிரிவு 15 (2) இன் படி, எந்தவொரு குடிமகனும் பொது இடங்களுக்குச் செல்லலாம். அவர்களின் உரிமைகளுக்கு கட்டுப்பாடுகள் அல்லது நிபந்தனைகளை விதிக்கக் கூடாது என்கிறது. ஆனாலும் பட்டியல் மற்றும் பட்டியல் பழங்குடி மக்களுக்கு எதிரான வன்கொடுமைகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. ஏன் இந்த நிலை?

கடந்த 9 ஆண்டுகளில் பட்டியலினத்தவர்களுக்கு எதிரான தாக்குதல் 43 விழுக்காடும், பட்டியல் பழங்குடியினருக்கு எதிரான தாக்குதல் 48 விழுக்காடும் அதிகரித்திருக்கிறது. இதில் பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் முதலிடம் வகிக்கின்றன. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் புள்ளி விவரங்களை ஆராய்ந்தால் அதிர்ச்சியளிக்கிறது. பாதிக்கப்படும் பெரும் பகுதியினர் கல்வி, தண்ணீர், உணவு, கண்ணியமான வேலை, கலாச்சாரம், சமயப் பங்கேற்பு, நில உரிமை, கருத்துச்சுதந்திரம். நீதிக்கான முறையீடு உள்ளிட்ட உரிமைகளை நாடும் போது இந்த தாக்குதல்கள் நடந்துள்ளன.

2014 ஆம் ஆண்டு முதல் 2022 வரை பட்டிய லின மக்கள் மீதான தாக்குதல்களில் பா.ஜ.க. ஆளும் உத்தரப்பிரதேச மாநிலம் முதலிடத்தில் உள்ளது. அதே போல் பட்டியல் பழங்குடியின மக்கள் மீதான தாக்குதலில் கடந்த 20 ஆண்டுகளாக பா.ஜ.க. ஆட்சி செய்யும் மத்தியப் பிரதேசம் முதலிடம் வகிக்கிறது. 2022 புள்ளிவிவரத்தின்படி பட்டியலின மக்களுக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த குற்றங்கள் 75 ஆயிரத்து 582. உத்தரப் பிரதேசத்தில் மட்டும் 15 ஆயிரத்து 368 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் தலித்களை அடக்கி ஒடுக்குவதில் முதலிடத்தில் இருப்பது தற்செயலானது அல்ல. பா.ஜ.க.வின் கொள்கை சார்ந்ததாகவும் இருக்கிறது. இந்திய அரசியல் சாசனத்தை அமல்படுத்துவதற்குப் பதிலாக; ஆண்டாண்டு காலமாக அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு அடிநிலையில் வைக்கப்பட்ட மக்கள் அப்படியே இருக்க வேண்டும் என்கிற மனுநீதி யின் வர்ணாசிரம முறையை முன்னிறுத்த முனைவதும் ஒரு காரணமாகும்.

இன்றைய உற்பத்தி உறவு சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் உடைமை வர்க்கத்தின் பிரதிநிதியாக பா.ஜ.க. இருக்கிறது. உடைமை வர்க்கத்தின் சுரண்டலை நிலை நிறுத்த சாதியக் கட்டமைப்பு முதன்மையாக இருக்கிறது. அதனால் தான் உடமை வர்க்கத்திற்குச் சேவகம் செய்யும் பா.ஜ.க. சாதியை, வர்ணாசிரம முறையை வலுப்படுத்துகிறது. அதன் ஒருபகுதியாகவே தலித்துக்களின் மீதான தாக்குதலையும் ஊக்கப்படுத்துகிறது. தலித் மக்கள் தங்களின் உரிமைகளை நிலை நாட்ட, சாதிய ஆதிக்க சக்திகளுக்கு எதிரான போராட்டத்தோடு, ஆர்.எஸ்.எஸ், சங்பரிவார் மற்றும் பா.ஜ.க. ஆட்சியாளர்களின் மதவெறி கார்ப்பரேட் கூட்டை எதிர்த்த போராட்டத்தையும் இணைத்து நடத்திட வேண்டும்.

இவ்வாறு தீக்கதிர் நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

### அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தாயார்

# திருமதி அமராவதி அம்மாள் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச. 23-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களின் தாயார் திருமதி.அமராவதி அம்மாள் அவர்களின் மறைவுக்கு தொலைபேசி மூலம் இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சரும் விருதுநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்களின் தாயார் திருமதி. அமராவதி அம்மாள் அவர்கள் வயது மூப்பின் காரணமாக மறைவெய்திய செய்தி கேட்டு மிகவும் வருத்தமுற்றேன்.

அன்பின் திருவுருவான அன்னையை இழந்து தவிக்கும் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தார்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**தொலைபேசி மூலம் இரங்கல்!**

மேலும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டும் தனது இரங்கலைத் தெரிவித்தார்.

### “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின்கீழ்

# மனுக்களைப் பதிவு செய்யும் சிறப்பு முகாம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் பார்வையிட்டனர்!

*புதுக்கோட்டை, டிச. 23 -*

*புதுக்கோட்டை நகராட்சி, நகர்மன்றத்தில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின்கீழ், மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 19.12.2023 அன்று பார்வையிட்டார்.*

*இதில் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களுக்கு தமிழக அரசின் திட்டங்கள் உடனுக்குடன் சென்றுசேர்வதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில், அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் மக்களை சென்றடையும் வகையிலும், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டம் 18.12.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.*

*அதன்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை நகராட்சி, அறந்தாங்கி நகராட்சி, அன்னவாசல் பேரூராட்சிப் பகுதிகளில் நடைபெறுகிறது. இம்முகாம்கள் அனைத்து தரப்பு மக்களுக்கும் 13 அரசுத் துறைகளின் சேவைகள் எளிதில் கிடைத்திடவும், தாமதங்களை தவிர்த்திடும் வகையிலும் நடத்தப்படுகிறது.*

*மேலும் இம்முகாமில், இன்றையதினம் “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் கீழ் மின்இணைப்பில் பெயர் மாற்றம் வேண்டி அளிக்கப்பட்ட மனுவின் மீது உடனடி தீர்வு காணப்பட்டு மின் இணைப்பில் பெயர் மாற்றத்திற்கான ஆணையினையும் மற்றும் 18.12.2023 அன்று மாற்றுத் திறனாளிகளுக்கான மத்திய அரசின் தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை (UDID) வேண்டி அளிக்கப்பட்ட மனுவின் மீது உடனடி தீர்வு காணப்பட்டு மத்திய அரசின் தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டையினையும் மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*எனவே பொதுமக்கள் அனைவரும் தங்களுக்கான கோரிக்கைகளை மனுக்களாக இம்முகாம்களில் அளித்து பயன்பெறலாம் என சட்டம், நீதிமன்ற ங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு. வை.முத்துராஜா மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மு.க.ராமகிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மு.செய்யது முகம்மது, புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் ஷியாமளா, அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.*

# திண்டிவனத்தில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்!

## செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

*திண்டிவனம், டிச. 23 -*

*விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சி சார்பில் மக்களுடன் முதல்வர் சிறப்பு குறைதீர்க்கும் முகாம்திண்டிவனத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.*

*திண்டிவனம்சப் கலெக்டர் திவ்யா ஷ ூநிகம் தலைமை தாங்கினார்.*

*திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார். நகராட்சி ஆணையர் தமிழ்ச்செல்வி அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் சிறுபான் மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் என்ற மாபெரும் மக்கள் குறை தீர்க்கும் முகாமினை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.*

*நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்: முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள தளபதி மு. க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.*

*மக்கள் மீது அக்கறை கொண்ட முதலமைச்சர் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களின் தேவைகளை நிறைவேற றக்கூடிய ஒரு ஆட்சியாகவும் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டிய தத்துவத்தின் அடிப்படையில் முதலமைச்சர் சிறப்பான ஆட்சியை நடத்தி வருவதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம் தெரிவித்தார்.*




தென்மாவட்ட மழை காரணமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு இரண்டாம் நாளாக நீலகிரி மாவட்டம் உதகையிலிருந்து உணவுகள், காய்கறி மற்றும் அத்தியாவசிய வெள்ள நிவாரணப் பொருட்களை ஏற்றிச் சென்ற வாகனங்களை நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி மு.அருணா கொடியசைத்து வழி அனுப்பி வைத்தார்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஈரோடு மாவட்டம், திண்டல் வேளாளர் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ”சட்டமன்ற நாயகர் கலைஞர்” கருத்தரங்கில் அரசு தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன் வெற்றி பெற்ற கல்லூரி மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். உடன் ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு.நாகரத்தினம், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சதீஷ்குமார், தமிழ்நாடு சட்டமன்ற கூடுதல் செயலர் ரவிச்சந்திரன், தமிழ்நாடு அரசு சட்டப்பேரவை இணைச் செயலாளர் திருமதி.ஸ்ரீவித்யா, துணைச்செயலாளர்கள் ராஜேந்திரன், கணேஷ் கோவிந்தன், மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநர் திருமதி.கலைச்செல்வி, ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாநகராட்சி மண்டல குழு தலைவர் குறிஞ்சி என்.தண்டபாணி, ஈரோடு மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் திருமதி.கஸ்தூரி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குருசாமி உட்பட பலர் உள்ளனர்.

# வருந்துகிறோம்





விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சருமான

**கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்**

அவர்களின் தாயார்

திருமதி **ஆர்.அமராவதி அம்மாள்**

(அகவை 94)

அகவை முதிர்வால் 22.12.2023 அன்று இயற்கை எய்தினார்

*வருத்தத்துடன்*

**விருதுநகர் தெற்கு - வடக்கு மாவட்ட தி.மு.க.**



திருநெல்வேலி மாவட்டம் திருவைகுண்டம் பகுதியில் வெள்ள நிவாரணப் பணிகளை குறித்து அரசு துறை அதிகாரிகளுடன் பொதுப்பணி துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. மற்றும் கழக முன்னோடிகள் உடன் இருந்தார்கள்.



கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குறிஞ்சிப்பாடி பாலூர் சாலையில், கெடிலம் ஆற்றின் குறுக்கே, நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ், ரூ.19.62 கோடி மதிப்பீட்டில், புதிய உயர்மட்ட பாலம் கட்டும் பணி அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி, அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் அ.அருண் தம்புராஜ் முன்னிலை வகித்தார். ஒன்றிய கழக செயலாளர்கள் வி.சிவக்குமார், தங்க.ஆனந்தன், பி.சுப்பிரமணியன், டி.காசிராஜன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### பெற்ற பிள்ளைகளை விட்டு மற்ற பிள்ளைகளின் கனவுகளை நிறைவேற்றி வரும்

# 379 அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு - மாநில அளவிலான 'கனவு ஆசிரியர்' விருதுகள்!

## பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கி பெருமிதம்!

நாமக்கல், டிச. 23-

மாணவர்களின் கனவுகளை நனவாக்கிய ஆசிரியர்களுக்கு, தமிழக அரசின் சார்பில் கனவு ஆசிரியர் விருது வழங்கப்படுகிறது என தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசினார்.

தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை சார்பில், மாநில அளவிலான கனவு ஆசிரியர் விருது வழங்கும் விழா நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் விவேகானந்தா கல்லூரி வளாகத்தில் விவேகானந்தா கலையரங்கில் நடைபெற்றது. நாமக்கல் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், பள்ளிக் கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ், நாமக்கல் எம்.எல்.ஏ பெ.ராமலிங்கம், நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எம்.மதுரா செந்தில், விவேகானந்தா கல்வி நிறுவன தலைவர் முனைவர் மு.கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு 379 ஆசிரியர்களுக்கு, கனவு ஆசிரியர் விருதுகளை வழங்கி பேசியதாவது, வடக்கிழக்கு பருவமழையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள 4 மாவட்டங்களில் இயல்பு நிலை திரும்ப முதலமைச்சர் ஆலோசனையின் பேரில் அமைச்சர் பெருமக்கள் பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் நிலையை எண்ணிக் கொண்டிருக்கும் இதே வேலையில் நாமக்கல் கவிஞர் மாளிகையில் எடுத்த முடிவை நாமக்கல் மாவட்டத்தில் நிறைவேற்றுகிறோம் என்ற மன நிறைவோடு இவ்விழாவில் கலந்து கொண்டுள்ளேன்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு பள்ளிகளை சேர்ந்த 379 ஆசிரியர்களுக்கு இன்றைய தினம் கனவு ஆசிரியர் விருது வழங்கப்படுகிறது. விருது பெறும் ஆசிரியர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் உங்களது குடும்ப உறுப்பினர்களுக்கு எனது நன்றியினையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



ஏனென்றால் குடும்ப உறுப்பினர்களை பிரிந்து பள்ளிக்கு சென்று பணியாற்றி வருகின்றனர். பெற்ற பிள்ளைகளை விட்டு மற்ற பிள்ளைகளின் கனவுகளை நிறைவேற்றும் மகத்தான பணியை மேற்கொண்டு வருபவர்கள் நமது ஆசிரியர்கள்.

ஆசிரியர்கள் இல்லை என்றால் இன்று மேடையில் நாங்கள் இல்லை. படி, படி என்ற ஆசிரியர்களையும், அடி, அடி என்று சொல்லிக் கொடுத்த ஆசிரியர்களையும் நாங்கள் மறக்கமாட்டோம். நீங்கள் இல்லை என்றால் சமுதாயத்தில் சிறந்து விளங்கிட இயலாது. இவ்வாறு மாணவர்களின் கனவுகளை நனவாக்கிய ஆசிரியர்களுக்கு கனவு ஆசிரியர் விருது வழங்கப்படுகிறது.

மார்வா காலிங்ஸ் என்ற அமெரிக்கா கல்வியாளர் ஒவ்வொரு மாணவனுக்குள்ளும் ஒரு புத்திசாலி குழந்தை அடைக்கப்பட்டுள்ளான் என்று தெரிவித்துள்ளார். அவ்வாறு ஒவ்வொரு மாணவனுக்குள்ளும் அடைக்கப்பட்டுள்ள புத்திசாலி குழந்தையை வளர்த்து சமுதாயத்தில் பெரிய ஆளாக மாற்றுவதில் ஆசிரியர்களுக்கு அளப்பறிய பங்கு உண்டு. தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள 115 தொகுதிகளை சார்ந்த அரசுப்பள்ளிகளுக்கு நேரடியாக சென்று ஆய்வு மேற்கொண்டேன். அங்கு மாணவர்களின் கற்றல் திறனை வளர்க்க ஆசிரியர் பெருமக்கள் பல்வேறு நடவடிக்கைகளை முழு ஈடுபட்டுடன் மேற்கொண்டு வருகின்றனர்.

அரசுப் பள்ளி ஆசிரியர்கள் நமது சமுதாயத்தின் பொக்கிஷம். கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துகடவு, ஒத்தக்கால் மண்டபத்தில் பார்வையற்ற ஆசிரியர் புதிய பரிமாணத்தில் மாணவர்களுக்கு பாடம் கற்பித்து வருகிறார். அதை Youtube லும் பதிவேற்றம் செய்து வருகிறார். நாகர்கோவிலில் கவிமணி தேசிய விநாயகம் அரசு பள்ளியில் அங்கு கணித மரம் உள்ளது. கணித ஆசிரியர் அங்குள்ள கணித மரத்தில் கணித பார்மூலாக்களை எழுதி தொங்க விட்டுள்ளார்கள். மாணவர்கள் விளையாடும் பொழுது கூட மரத்தின் அருகில் வருகையில் அவர்களால் கணித பார்மூலாக்களை படிக்க முடியும் என்ற வகையில் இந்த சிறந்த முயற்சியை எடுத்துள்ளார்கள். இவ்வாறு மாணவர்களுக்கு எளிமையாக கற்பித்து வரும் அரசுப்பள்ளி ஆசிரியர்களை யாரும் மிஞ்ச இயலாது. சிறப்பாக செயல்பட்டு வரும் ஆசிரியர் பெருமக்களை பள்ளிக் கல்வித்துறை சார்பில் வெளிநாடு சுற்றுலா அழைத்து செல்வது வழக்கம், அதுபோல இந்த ஆண்டும் 55 ஆசிரிய பெருமக்களை வெளிநாடு சுற்றுலா அழைத்து செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரைம் இண்ஸ்ட்டியுசன் எனப்படும் பள்ளியில் பயின்ற நமது அரசுப்பள்ளி மாணவர்கள் 274 மாணவர்கள் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் என்.ஐ.டி, ஐ.ஐ.டி, தேசிய சட்ட கல்லூரி உள்ளிட்ட தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் சேர்ந்து கல்வி பயின்று வருகின்றனர். கடந்த வாரம் கேரளா மாநிலம், கண்ணூர் சென்றிருந்த போது நமது பிரைம் இண்ஸ்ட்டியுசனில் பயின்ற மாணவர் தற்போது அங்கு உயர் கல்வி பயின்று வருகிறார். அவருடன் கலந்துரையாடியபோது கல்வியில் பின்தங்கிய மாவட்டத்திலிருந்து தேர்வாகியுள்ளார் என்று தெரிந்து கொண்டேன். இந்த அளவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கல்வி துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களினால் தமிழ்நாட்டில் கல்வியில் பின்தங்கிய மாவட்டமே இல்லை என்ற நிலை எட்டப்பட்டுள்ளது. இவ்வாறு தேர்வு செய்யப்படும் மாணவர்கள், மற்ற மாணவர்களுக்கு முன்னுதாரணமாகவும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் தூதுவர்களாகவும் செயல்படவேண்டும்.

இன்றைய தினம் 379 ஆசிரியர்களுக்கு கனவு ஆசிரியர் விருது வழங்கப்படுகிறது. 2ஆம் கட்டத்தில் 964 ஆசிரியர்கள் பங்கேற்றனர். அவர்களில் வெற்றி பெற்றவர்களுக்கு இறுதியாக கனவு ஆசிரியர் விருது வழங்கப்படுகிறது. வெற்றி பெற்றவர்களுக்கு மட்டுமல்லாது பங்கேற்றவர்களுக்கும் சான்று வழங்கி சிறப்பு செய்யப்படுகிறது. வெற்றி பெற்றவர்களும், பங்கேற்றவர்களும் தொடர்ந்து அடுத்த ஆண்டும் கனவு ஆசிரியர் விருது பெற எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண் ஆசிரியர்கள் உடை உடுத்துவதில் உள்ள நடைமுறை சிக்கல்களை தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை வரப் பெற்றது. அது குறித்து ஆய்வு மேற்கொண்ட போது பெண் ஆசிரியர்கள் தங்களுக்கு ஏதுவான உடையினை அரசணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளுக்குட்பட்டு அணிந்து கொள்ளலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுத் தேர்வு தேதிகள் வெளியிட்ட பின்பு 38 மாவட்டங்களைச் சேர்ந்த 8,500 தலைமையாசிரியர்களுடன் காணொலி மூலம் கலந்துரையாடினேன். அப்போது அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் 115 சட்டமன்ற தொகுதிகளின் ஆய்வின் போது தெரிவிக்கப்பட்ட 100 கருத்துகள்குறித்துவிவாதித்தோம். தேர்ச்சி சதவிகிதம் அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தேன். அரசு பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முதலமைச்சர் அவர்கள் கடந்தாண்டு 1000 பள்ளி வகுப்பறைகளை திறந்து வைத்தார். இந்தாண்டும் மேலும் 1000 பள்ளி வகுப்பறைகள் திறப்பதற்கு தயார் நிலையில் உள்ளது. இன்று நமது இனமான பேராசிரியர் அவர்களின் பிறந்த நாள். இச்சிறப்பு மிக்க நன்னாளில் ஆசிரியர்களுக்கு கனவு ஆசிரியர் விருது வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இதே போன்று அவரது பிறந்த நாளில் கனவு ஆசிரியர் விருது வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நான் முதல்வன் திட்டத்தையும், சென்ற ஆண்டு பிறந்த நாளின் போது பல்வேறு பள்ளிக்கல்வித்துறை திட்டங்களையும் அறிமுகப்படுத்தினோம். அரசுப்பள்ளி என்பது வறுமையின் அடையாளம் இல்லை. நமது பெருமையின் அடையாளம் என்ற வகையில் பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறோம் என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

### நிலக்கரி தயாரிப்புச் செலவு மற்றும்

# அனல் மின்சக்தியின் கட்டணத்தைக் குறைக்க அரசின் நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி,டிச.23-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 13 டிசம்பர் 2023 அன்று மக்களவையில், நிலக்கரி தயாரிப்பு செலவுகளை குறைக்கவும், இறக்குமதியை குறைக்கவும், அனல் மின்சக்தியின் கட்டணத்தை குறைக்கவும், ஒன்றிய அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்னென்ன? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின், நிலக்கரித் துறை அமைச்சர், பிரகலாத் ஜோஷி அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் நிலக்கரித் துறை அமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:



பொதுத்துறையில் கீழ் செயல்பட்டு வரும் நிலக்கரி நிறுவனங்களில் நிலத்தின் கீழ் அமைந்துள்ள சுரங்கங்களி லும், திறந்த வெளி சுரங்கங்களிலும் பல்வேறு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தயாரிப்பு செலவினை குறைத்திட ஒன்றிய அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருவதாகவும், நிலக்கரி தயாரிப்புகளை அதிகப்படுத்த தேவையான அனைத்து முயற்சிகளுடன் வருவாய்ப் பங்கீட்டு முறையிலும் செயல்பட அனைத்து வழிமுறைகளையும் அரசு எடுத்து வருகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நிலக்கரி இறக்குமதி செலவினை குறைத்திடும் வகையில் பல்வேறு முன்முயற்சி களை அரசு எடுத்து வருகிறது என்றும், உதாரணமாக, நிலக்கரி சுரங்க ஏலத்தை முறைபடுத்துதல், புதிய சுரங்கங்களை கண்டறிதல், மாநிலங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல், புதிய அனல் மின் நிலையங்களை உருவாக்குதல், கணினி வழி ஏலத்தை ஊக்கப்படுத்துதல், போக்குவரத்து தடைகளை சீர் செய்தல் என அனைத்து முயற்சிகளையும் ஒன்றிய அரசு எடுத்து வருகிறது என்றும், கடந்த 2021 - 22ம் ஆண்டில் 248 மில்லியன் டன்களாக இருந்த இறக்குமதி, 2022 23ம் ஆண்டில் 237 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது என்றும், தற்போதைய இந்திய நிலக்கரி தயாரிப்பு 893 மில்லியன் டன்களாக உள்ளது என்றும், நிலக்கரி சுரங்கத்திற்கும் அனல்மின் நிலையத்திற்குமான போக்குவரத்தை சீர்படுத்தி, போக்குவரத்து செலவை குறைக்க 2014 ஆண்டு முதலாகவே பொதுத்துறை நிறுவனங்கள் கவனம் செலுத்தி வருகின்றன என்றும் அதற்கு தேவையான பணிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன என்றும் ஒன்றிய அரசின், நிலக்கரித் துறைஅமைச்சர், பிரகலாத் ஜோஷி அவர்கள், மக்களவையில் திமுக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலை அளித்துள்ளார்.

### நெல்லையில் - பணியில் இருக்கும்போது இறந்த போக்குவரத்துத் தொழிலாளர்களின் வாரிசுகள்

# 32 பேருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனங்கள்!

## அமைச்சர்கள் தங்கம் தென்னரசு - எஸ்.எஸ்.சிவசங்கர் வழங்கினர்!

நெல்லை.டிச.23.

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் - பணியில் இருக்கும் போது இறந்த போக்குவரத்துத் தொழிலாளர்களின் வாரிசுகள் 32 பேருக்கு நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு,போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப. கார்த்திகேயன் முன்னிலை யில் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள் வழங்கினார்கள்.

முதலமைச்சர் அவர்களின் தலைமையில் போக்குவரத்துக் கழகத்தில் பொதுமக்களின் எதிர்பார்ப்புகளையும், உணர்வுகளையும் கண்டறியும் நோக்கில், பேருந்தில் பொதுமக்களுக்கு சிறந்த சேவை வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் பல முயற்சிகள் மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக நேற்று 22ம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி நெல்லை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து பணியின் போது இறந்தவர்களின் 32 வாரிசு தாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு,போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் மரு. கா.ப.கார்த்திகேயன்,தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக நிர்வாக இயக்குனர் மகேந்திரகுமார்,பொது மேலாளர்கள் சரவணன்,மெர்லின் ஜெயந்தி, தொ.மு.ச. பொதுச்செயலாளர் தர்மன்,உறுப்பினர்கள் முருகன்,விஷ்ணு சிவன்பிள்ளை வணிக மேலாளர் சுப்பிரமணியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# 'உலக முதலீட்டாளர்கள் மாநாடு' முன்னேற்பாட்டுப் பணிகள்!

## தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா கள ஆய்வு!

சென்னை, டிச. 23-

உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024ன் முன்னேற்பாட்டுப் பணிகளை தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கள ஆய்வு மேற்கொண்டார்.

தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வரும் 2024 ஆண்டு ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடை பெறவுள்ளதை முன்னிட்டு அதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை நேற்று முன்தினம் (22.12.2023) கள ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், அரசு முதன்மைச் செயலாளர்/ சென்னை மெட்ரோ ரெயில் லிமிடெட் மேலாண்மை இயக்குநர் மு.ஆ. சித்திக், பொதுப்பணித் துறை அரசு முதன்மைச் செயலாளர் மரு. பி. சந்திரமோகன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர், வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறு வனத்தின் மேலாண்மை இயக்குநர் சந்திப் நந்தூரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை வர்த்தக மையத்தில் இம்மாநாடு நடைபெற உள்ள புதிய கட்டடப் பணிகளை கள ஆய்வு மேற்கொண்ட தலைமைச் செயலாளர், கட்டுமானப் பணிகளின் தரத்தினை உறுதி செய்வதுடன், கட்டுமானப் பணிகளை விரைந்து முடிப்பதற்கான அறிவுரைகளை வழங்கினார்.

மேலும், சென்னை வர்த்தக மையப் பகுதியில் சாலை அமைக்கும் பணிகளை குறித்த நேரத்தில் விரைந்து முடிக்கும்படி சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்திற்கு அறிவுரை வழங்கினார். மேலும், சுற்றுப்புறங்களில் உள்ள கழிவுகள் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றி அக்கட்டடம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களை தூய்மையாகப் பராமரிக்கும்படி பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களைக் கேட்டுக்கொண்டார்.



நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரசு போக்குவரத்து கழகம் சார்பில் பெற்றோரை இழந்த 32 வாரிசு தாரர்களுக்கு நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குனர் மகேந்திரகுமார் உள்பட பலர் உள்ளனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் "மக்களுடன் முதல்வர்" திட்டம் முகாம் மூலம் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் தொடர்புடைய துறை அலுவலர்களுடன் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், திருப்பூர் சார் ஆட்சியர் செல்வி.சௌமியா ஆனந்த், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் உள்ளனர்.

# நெல்லை மாவட்டத்தில் நேரில் ஆய்வு செய்து

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நிவாரண உதவிகள் வழங்கினார்!

## நிவாரணப் பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவு!

நெல்லை, டிச. 23 –

**அதி கனமழையால் மிகக் கடுமையாகப்பாதிக்கப்பட்டதிருநெல்வேலி மாவட்டத்திற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களுக்கு ஆறுதல் கூறி, நிவாரண உதவிகளை வழங்கி, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைந்து முடித்திட உத்தரவிட்டார்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அதிகனமழையால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட திருநெல்வேலிக்கு நேற்று முன்தினம் (21.12.2023) நேரில் சென்று பெரியார் பேருந்து நிலைய சந்திப்பில், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை சந்தித்து, ஆறுதல் கூறி, அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்து கேட்டறிந்து, தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்து தரும் என்று தெரிவித்தார்.

தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் பெய்த அதிகனமழையின் காரணமாக ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளப் பாதிப்புகளை எதிர்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி, வெள்ள பாதிப்புகளை சீர் செய்திடவும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளவும், அமைச்சர் பெருமக்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுடன் இணைந்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பணி மேற்கொண்டு வருகின்றனர்.

அதி கனமழையால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் (21.12.2023) காலை சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூத்துக்குடி, மறவன் மடம் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து, வெள்ளச் சேத விவரங்களைக் கேட்டறிந்து, பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் உரிய நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

செயின்ட் மேரிஸ் பள்ளியில் உள்ள நிவாரண மையத்திற்கு சென்று முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு அரிசி, வேஷ்டி, சேலை, போர்வை, பாய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கி, எட்டையபுரம் 3-வது கேட் மேம்பாலத்திலிருந்து வெள்ளம் சூழ்ந்த பகுதிகளையும், குறிஞ்சி நகர் போல் பேட்டையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியையும் பார்வையிட்டு, சூழ்ந்துள்ள வெள்ளநீரை அகற்றும் பணியினை விரைந்து மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதன் தொடர்ச்சியாக, அதி கனமழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்வதற்காக நேற்று முன்தினம் மாலை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலி சென்றடைந்தார்.

### முகாம்களில் உள்ளவர்களுக்கு நிவாரணம்!

திருநெல்வேலி பெரியார் பேருந்து நிலைய சந்திப்பில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதலமைச்சர் அவர்கள் ஆறுதல் கூறி, அவர்களுக்கு முகாம்களில் செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்து கேட்டறிந்து, முகாம்களில் தங்கியுள்ள சுமார் 1000 நபர்களுக்கு அரிசி, வேஷ்டி, சேலை, போர்வை, பாய், பிஸ்கட் மற்றும் ரொட்டி, பால் பவுடர், தண்ணீர் பாட்டில் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்.

### 2– ம் வகுப்பு மாணவி நிவாரண நிதி வழங்கினார்!

அப்போது, ஆட்டோ ஓட்டுநர் பாலசுப்பிரமணியம் அவர்களின் இரண்டாம் வகுப்பு பயிலும் மகள் செல்வி சேவிதா பகவதி தனது உண்டியல் சேமிப்பு பணத்தை நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார். இச்சிறுமியை முதலமைச்சர் அவர்கள் பாராட்டி வாழ்த்தினார்.

திருநெல்வேலி மாநகராட்சி வர்த்தக மையத்தில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்க பெறப்பட்டுள்ள நிவாரணப் பொருட்களின் விவரங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்.

இந்த வர்த்தக மையத்தில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து இதுநாள் வரை பெறப்பட்ட நிவாரணப் பொருட்களான 14,010 கிலோ அரிசி, 3195 மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு, 6050 லிட்டர் பால், 4590 கிலோ பால் பவுடர், 5761 பிஸ்கட்/ரொட்டி/ரஸ்க், 5136 லிட்டர் சமையல் எண்ணெய், 43,416 லிட்டர் தண்ணீர் பாட்டில்கள், 93,666 இதர அத்தியாவசியப் பொருட்களான தீப்பெட்டி, மெழுகுவர்த்தி, கொசுவத்தி சுருள், போர்வை, பாய், துண்டு மற்றும் நாப்கின் போன்ற நிவாரணப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு, இவற்றில் 91 சதவிகித பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது என்று அரசு உயர் அலுவலர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின்போது, சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சா.ஞானதிரவியம் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் வஹாப், ரூபி மனோகரன், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம். சரவணன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் கா.ப.கார்த்திகேயன், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், ஈரோடு மாநகராட்சி ஆணையர் சிவகிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.







மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளாக இளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திருச்செந்தூர் நகராட்சிக்குட்பட்ட 10–ஆவது வார்டு; பாரதி நகரில் வசிக்கும் பொதுமக்களுக்கு அரிசி, மளிகைப் பொருட்கள், பாய், போர்வை உள்ளிட்ட நிவாரண உதவிகளை வழங்கினார். உடன் அமைச்சர்கள் ஆர்.அனிதா ராதாகிருஷ்ணன், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.




இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்றுக் கொண்டு முகாமினை பார்வையிட்டார். இதில் சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.முனிரத்தினம், மாவட்ட வருவாய் அலுவலர் சுரேஷ், நகர மன்ற தலைவர் அ.தமிழ்ச்செல்வி அசோகன், துணை தலைவர் ஏ.எஸ்.பழனி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் அ.அசோகன் மாவட்ட துணை செயலாளர் மு.சிவானந்தம், நகர செயலாளர் எம்.கோபி, நகர துணைச் செயலாளர் செல்வி, ஒன்றிய செயலாளர்கள் டி.கிருஷ்ணமூர்த்தி, சந்திரன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



பண்ருட்டி நகராட்சிக்கு உட்பட்ட 10.11.12.13.14.15.16.33 ஆகிய வார்டுகளுக்கன மக்களுடன் முதல்வர் சிறப்பு திட்ட முகாம் எஸ்.வி.திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்துகொண்டு, பண்ருட்டி நகர மன்ற தலைவர் நகர கழகச் செயலாளர் க.இராஜேந்திரன் முன்னிலையில் குத்துவிளக்கு ஏற்றி பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்று முகாமை துவக்கி வைத்தார். உடன் நகர மன்ற துணை தலைவர் சிவா, நகராட்சி ஆணையாளர் பானுமதி, மாவட்ட துணை செயலாளர் ஆர்.எஸ்.எம்.தணிகை செல்வம், அண்ணா கிராம ஒன்றியச் செயலாளர் வி.கே.வெங்கட்ராமன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ஜி.கதிர்காமன், நெல்லிக்குப்பம் நகர செயலாளர் ப.மணிவண்ணன், தொரப்பாடி பேரூர் செயலாளர் வனஜா சுந்தரவடிவேல், பட்டாம் பாக்கம் பேரூர் செயலாளர் ஜெயமூர்த்தி, நகர அவை தலைவர் ராஜா, நகர பொருளாளர் ராமலிங்கம், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பரணி சந்தர், மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் சங்கர், நகர துணை செயலாளர் கௌரி அன்பழகன், மாவட்ட பிரதிநிதி பிரபு, நகர துணை செயலாளர் சீனிவாசன், சசிகுமார் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அனைத்துத் துறை அதிகாரிகள் ஊழியர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



தி.மு.கழக இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர் ஜோயலின் தாயார் திருமதி. எஸ்தர் செல்வம் அவர்கள் உடல் நலக் குறைவால் நேற்று முன்தினம் இயற்கையெய்தினார். இதையடுத்து கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடியில் உள்ள ஜோயலின் இல்லத்திற்கு சென்று மறைந்த திருமதி. எஸ்தர் அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார். உடன் அமைச்சர்கள் அனிதா ராதாகிருஷ்ணன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று முன்தினம் (21.12.2023) அதி கனமழையினால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ள அரிசி, பருப்பு, கோதுமை, ரவா, சர்க்கரை, பிஸ்கட், பிரட் மற்றும் குடி தண்ணீர்பாட்டில் ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினைத் தயார் செய்யும் பணியை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வின் போது நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## வேளாண் பொருட்களின்

# ஏற்றுமதி - இறக்குமதிக்கு ஒன்றிய அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகள் யாவை?

### மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, டிச. 23-

நாட்டில் உள்நாட்டு விவசாய உற்பத்தி தற்போதுள்ள சூழலில் அரிசி, கோதுமை, மைதா, பருப்பு வகைகள், பட்டாணி வகைகள், சமையல் எண்ணெய் மற்றும் பிற மதிப்பு கூட்டப்பட்ட வேளாண் பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு ஒன்றிய அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பியதைத் தொடர்ந்து



சீனா உள்ளிட்ட பிற நாடுகளில் இருந்து அரிசி, பருப்பு வகைகள், பட்டாணி மற்றும் பிற மதிப்பு கூட்டப்பட்ட வேளாண் பொருட்கள் போன்ற அத்தியாவசிய உணவு தானியங்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு ஒன்றிய அரசு கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை விதித்துள்ளதா? என்றும்,

அப்படியானால், உள்நாட்டு விவசாயிகள் மற்றும் பண்ணை தொழிலாளர்களின் நலன்களை உறுதி செய்வதற்காக அத்தகைய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட அதன் விவரங்கள் மற்றும் அத்தகைய விவசாய பொருட்களின் பட்டியல் யாவை? என்றும்,

நாட்டில் உள்ள விவசாயப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு நிதிப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார பாதுகாப்பை வழங்குவதற்கு ஒன்றிய அரசால் எடுக்கப்பட்ட சீரிய நடவடிக்கைகள் யாவை? மேலும் நாட்டில் விவசாயம் தொடர் பான பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் கடந்த ஐந்தாண்டுகளில் மாநில வாரியாக ஒதுக்கீடு செய்யப் பட்ட நிதி மற்றும் வழங்கப்பட்ட நிதி விவரங்கள் விபரம் என்ன?

இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா எழுத்துபூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

பெரும்பாலான விவசாயப் பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான வர்த்தகக் கொள்கைகளில் கட்டுப்பாடு ஏதும் விதிக்கப்பட வில்லை. இருப்பினும், தற்போது உள்நாட்டு உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஒன்றிய அரசு சில அத்தியாவசிய உணவு தானியங்களுக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அத்தகைய பொருட்களின் விவரங்கள் குறித்து DGFT எனும் அந்நிய வர்த்தகத்தின் இயக்குநர் ஜெனரல் அலுவலக தரவுகள் இணைப்பு- I-இல் குறிப்பிட்டுள்ளன.

அதன்படி பாசுமதி அரிசி தவிர ஏனைய அரிசி வகைகள், உடைக்கப்பட்ட நொய் அரிசி, கோதுமை, மைதா ஆகிய முக்கிய உணவுப் பொருட்கள் ஏற்றுமதிக்கு தடை போடப்பட்டுள்ளது. அதே நேரம் இவற்றை எஸ்.டி.இ. அரசு வர்த்தக நிறுவனங்கள் மட்டுமே இறக்குமதி செய்ய முடியும். பாசிப்பருப்பு இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. அதே நேரத்தில் கடுகு எண்ணெய் ஏற்றுமதி செய்ய 5 கிலோ டின்களில் அடைக்கப்பட்டு குறைந்த பட்ச ஏற்றுமதி விலையாக டன் ஒன்றுக்கு 900 அமெரிக்க டாலர் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. பச்சைப் பட்டாணி மஞ்சள் பட்டாணி இதர வகை பட்டாணி இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது.

இது தவிர பொதுவாக இதர உணவுப் பொருட்கள் வர்த்தகத்தில் எந்த நாட்டிற்கும் குறிப்பிட்ட கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை.

வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள அரசு நிறுவனமான ECGC Ltd. ஏற்றுமதிக்கான கடன் அபாயக் காப்பீடு மற்றும் தொடர்புடைய சேவைகளை வழங்குகிறது.

நாட்டில் விவசாயம் தொடர்பான பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் கடந்த ஐந்தாண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் வழங்கப்பட்ட நிதி விவரங்கள், மாநில வாரியாக இணைப்பு--II இல் இணைக்கப்பட்டுள்ளன.

அதன்படி கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு ரூ.5031 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூ.4176 கோடி வழங்கப்பட்டது. அனைத்து மாநிலங்கள் யூனியன் பிரதேசங் களுக்கு ரூ.72,380 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூ.46,636 கோடி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

## பனிக்காலம்

# உடல் நலனில் அக்கறை - காலத்தின் கட்டாயம்!

### 'தினகரன்' நாளேடு தலையங்கம்

சென்னை, டிச.23-

டிசம்பர் மாதத்தை எல்லோரும் டிசாஸ்டர் மாதம் எனக் கூறத் தொடங்கி விட்ட நிலையில் மழை, வெள்ளம், புயல் பாதிப்பிலிருந்து மக்கள் விடுபடும் நிலையில் பனி சீசன் துவங்கி விட்டதால் உடல் நலனில் அனைவரும் அக்கறை காட்டவேண்டியது காலத்தின் கட்டாயம் என 'தினகரன்' நாளேடு 22.12.2023-ல் தலையங்கம் வெளியிட்டுள்ளது.



தினகரன்

டிசம்பர் 22, 2023 வெள்ளிக்கிழமை

உடல்நலனில் கவனம் தேவை

டிசம்பர் மாதத்தை இப்போது எல்லோருமே டிசாஸ்டர் (disaster) மாதம் என கூறத்தொடங்கி விட்டனர். கடந்த டிச. 4ம் தேதி சென்னை, திருவள்ளூர் உட்பட 4 மாவட்டங்கள், அடுத்த 2 வாரங்களில் நெல்லை, தூத்துக்குடி உட்பட 4 மாவட்டங்கள் என 8 மாவட்டங்களில் பெய்த மிக கனமழை தந்த பேரழிவை அவ்வளவு எளிதாக மறந்து விட முடியாது. ஓராண்டில் பெய்ய வேண்டிய மொத்த மழை, ஒரே நாளில் பெய்ததால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளில் இருந்து தமிழக மக்கள் மெல்ல மீண்டு வந்து கொண்டிருக்கின்றனர். மாநில அளவிலும், தனிப்பட்ட முறையிலும் பெரும் பொருளாதார பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

டிசம்பர் மாத பேரழிவுகள் தமிழகத்திற்கு புதிய தல்ல. ஏற்கனவே, கடந்த 1964, டிச. 23ம் தேதி நள்ளிரவு வீசிய புயலால், ராமேஸ்வரம் அருகே

அது வருமாறு:-

மாதத்தை இப்போது எல்லோருமே டிசாஸ்டர் (disaster) மாதம் என கூறத் தொடங்கி விட்டனர். கடந்த டிச. 4ம் தேதி சென்னை, திருவள்ளூர் உட்பட 4 மாவட்டங்கள், அடுத்த 2 வாரங்களில் நெல்லை, தூத்துக்குடி உட்பட 4 மாவட்டங்கள் என 8 மாவட்டங்களில் பெய்த மிக கனமழை தந்த பேரழிவை அவ்வளவு எளிதாக மறந்து விட முடியாது. ஓராண்டில் பெய்ய வேண்டிய மொத்த மழை, ஒரே நாளில் பெய்ததால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளில் இருந்து தமிழக மக்கள் மெல்ல மீண்டு வந்து கொண்டிருக்கின்றனர். மாநில அளவிலும், தனிப்பட்ட முறையிலும் பெரும் பொருளாதார பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

டிசம்பர் மாத பேரழிவுகள் தமிழகத்திற்கு புதியதல்ல. ஏற்கனவே, கடந்த 1964, டிச. 23ம் தேதி நள்ளிரவு வீசிய புயலால், ராமேஸ்வரம் அருகே தனுஷ்கோடி நகரமே உருக்குலைந்து போனது. ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அந்த பாதிப்பிலிருந்து இப்போதுதான் தனுஷ்கோடி மீண்டும் புத்துயிர் பெற்று வருகிறது. கடந்த 2004, டிச. 26 சுனாமியால் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் பெரும் சேதம் ஏற்பட்டது. இந்தியா முழுவதும் கிட்டத்தட்ட 7 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். தமிழகத்தில் சுமார் 2,500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். தற்போது சென்னை, நெல்லையில் பேய் மழை பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளது. இங்கே நாம் ஒரு விஷயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்.

கடந்த 2019, டிசம்பரில் சீனாவில் கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியது. அப்போது சீனாவில் பயங்கரமான பனிப்புயல் வீசியது. இதனால் கொரேனாவின் தாக்கம் மேலும் அதிகரித்தது. மற்ற நாடுகளுக்கும் மின்னல் வேகத்தில் பரவியது. இந்தியாவில் மட்டும் சுமார் 5.33 லட்சம் பேர் உயிரிழந்தனர். தடுப்பூசி உள்ளிட்ட பல்வேறு தடுப்பு முறைகளால் கொரோனாவின் தாக்கம் குறைந்து வந்தது. தற்போது பருவமழை பரவலாகவும், வெளுத்து வாங்கி வரும் சூழலில் கொரோனா மீண்டும் டிசம்பரில் மெல்ல வேகமெடுத்து வருகிறது.

இந்தியாவில் புதிய வகை உருமாற்ற கொரோனா வைரஸான ஜேஎன் 1 தொற்று பரவல் கண்டறியப்பட்டுள்ளது. கடந்த 2 வாரங்களில் மட்டும் 16 பேர் உயிரிழந்துள்ளனர். இருப்பினும், பொதுமக்கள் கவனத்துடன் இருக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இந்தியாவில் தற்போது கொரோனா பாதிப்படைந்த நோயாளிகளின் எண்ணிக்கை 2,700ஐ நெருங்கியுள்ளது. இதில் ஜேஎன் 1 வகை வைரஸால் 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கேரளாவில் இந்த தொற்று கண்டறியப்பட்டுள்ளது. கோவிட் - 19 வைரஸ் தாக்கம் முதன் முதலாக கேரளாவில்தான் கண்டறியப்பட்டது.

அங்கு நிலவும் குளிர்ச்சியான சூழல் மற்றும் சபரிமலை சீசன் என்பதால் கூட்டம் அதிகளவில் காணப்படுகிறது. இந்த சூழலில் பொதுமக்கள் கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியமாகிறது. நோய் பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக மருத்துவர்களை அணுக வேண்டியது அவசியமாகிறது. தமிழகம் மற்றும் தென்மாநிலங்களில் தற்போது பருவமழை தீவிரமடைந்துள்ளது. ஏற்கனவே, தமிழகத்தில் வெள்ளத்தால் 8 மாவட்ட மக்கள் கடும் பாதிப்புகளை சந்தித்துள்ளனர். கழிவுநீர் சூழ்ந்த வெள்ள நீரில் இருக்க வேண்டிய துரதிருஷ்ட சூழலில் உடல்நலன் பாதிக்கப்படும் வாய்ப்புகள் அதிகளவு உள்ளன. மழையை தொடர்ந்து பனி சீசன் துவங்கி விட்ட நிலையில், ஒவ்வொருவரும் உடல்நலனில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

### கழக இளைஞரணி மாநில துணைச் செயலாளர்

# எஸ்.ஜோயல் தாயார் எஸ்தர் செல்வம் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசி மூலம் இரங்கல் தெரிவித்தார்!

சென்னை, டிச. 23–

கழக இளைஞரணி துணைச் செயலாளர் எஸ். ஜோயல் தாயார் திருமதி எஸ்தர் செல்வம் மறைவு எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவலறிந்து கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலை பேசி மூலம் ஜோயலுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.

அது வருமாறு:–

கழக இளைஞரணி மாநிலத் துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல் அவர்களின் தாயார் திருமதி எஸ்தர் செல்வம் அவர்கள் 20.12.2023 அன்று மறைவெய்தினார்என அறிந்துமிகவும்வருந்தினேன்.

ஆளாக்கிய அன்னையை இழந்து தவிக்கும் ஜோயல் மற்றும் அவரது குடும்பத்தார்க்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## ஒகேனக்கலை

# சர்வதேச சுற்றுலாத் தலமாக அறிவித்திடுவீர்!

### மக்களவையில் செந்தில்குமார் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.23-

ஒகேனக்கல் மற்றும் சித்தேரி மலை கிராமத்தை சர்வதேச சுற்றுலாத்தலமாக மாற்ற வேண்டும் என்று தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில்குமார் கோரிக்கை விடுத்தார்.



தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில் குமார் நாடாளுமன்றத்தில் விதி எண் 377 கீழ் கேட்கப்பட்ட கோரிக்கையில் கூறியிருப்பதாவது:-

தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி தமிழ்நாட்டின் நயாகரா என்று குறிப்பிடப்படுகிறது. ஒகேனக்கல்லை சர்வதேச சுற்றுலா தலமாக ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சகம் அங்கீகரிக்க வேண்டும் என்று பலமுறை நேரிலும் கடிதம் வாயிலாகவும் முன்மொழிந்துள்ளேன்.

இந்த இயற்கை அதிசயம், அதன் பரந்த காட்சிகளுடன், உலகம் முழுவதிலுமிருந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் ஒரு முக்கிய பொழுதுபோக்கு இடமாக மாறும் திறனைக் கொண்டுள்ளது. ஒகேனக்கல்லை உலகளாவிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்தவும், அதன் உள்கட்டமைப்பை மேம்படுத்தவும் தேவையான நிதியை ஒதுக்குமாறு ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சகத்திடம் தற்பொழுது மீண்டும் வலியுறுத்தியுள்ளேன்.

அதேபோல் தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில் உள்ள சித்தேரி மலைகளின் பழங்குடி மலைப் பகுதிகளில் அமைந்துள்ள சுற்றுச்சூழல் சுற்றுலா விளையாட்டு மற்றும் சாகச விளையாட்டுகளை மேம்படுத்துவதற்கு, முறையான உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுடன் சுற்றுலாத் தலங்களாக செழித்து வளரக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளதாகவும் அதனால் இந்த கோரிக்கையை பரிசீலிக்க ஒன்றிய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மேலும் அதகபாடி, அதியமான்கோட்டை, தடங்கம், பெலஜங்கமனஹள்ளி, ஈச்சம்பட்டி ஆகிய கிராமங்களில் புதிய தொழில் பூங்கா அமைக்கப் பட உள்ளது, அதற்கு தேவையான நிலங்களை சிப்காட் நிறுவனத்தி டம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் வழங்கிய அளவுகோல்களின்படி இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மேலும் நிலுவையில் உள்ள அனுமதிகளை விரைவுபடுத்தவும், நிதியை ஒதுக்கவும், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், ஓசூர், பெங்களூர் ஆகிய இடங்களில் இளைஞர்களுக்கு உள்ள வேலை வாய்ப்பை போல் தருமபுரி மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கும், வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எவரெஸ்ட் கோ.நடராசன்
### டிசம்பர் 23 (2003)



திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூர்க் கழகச் செயலாளராக இரு முறையும் – மாவட்ட துணைச் செயலாளராக மூன்று முறையும் பொறுப்பு வகித்தவர்.

போளூர் நகர வங்கித் தலைவராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி எழுத்து அழிப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டம், சட்ட நகல் எரிப்புப் போராட்டம் என கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெ. ஏழுமலை
### டிசம்பர் 23 (2018)



கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் கிளைப் பிரதிநிதி, சோழவரம் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், ஒன்றிய அவைத்தலைவர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

இரு முறை பாடியநல்லூர் ஊராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

உயர்நிலைப் பள்ளி அமைப்புக்குழுத் தலைவர், காரனோடை அவுசிங் சொசைட்டி தலைவர் என பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



நெல்லை மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிப்படைந்த வண்ணாரப் பேட்டையில் உள்ள அரசு போக்குவரத்துக் கழக பணிமனையினை போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குனர் மகேந்திரகுமார், பொது மேலாளர் சரவணன் உட்பட பலர் உள்ளனர்.

### வருவாய்த்துறை அமைச்சரின் தாயார் மறைவு

# தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றியம் இரங்கல்!

## நிர்வாகிகள் ஜெ.ராஜா - அண்ணா குபேரன் அறிக்கை!

சென்னை, டிச. 23 -

வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தாயார் ஆர். அமராவதி அம்மாள் அவர்களின் மறைவுக்கு தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றியம் (மத்தி) இரங்கல் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கத்தின் தலைவர் ஜெ. ராஜா - பொதுச் செயலாளர் அண்ணா குபேரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே. கே. எஸ். எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களின் தாயார் திருமதி. ஆர். அமராவதி அம்மாள் இன்று அதிகாலை 94 வயதில் இயற்கை எய்தினார் என்கிற செய்தி கேட்டு மிகுந்த வருத்தம் அடைகின்றோம்.

தனது தாயாரை இழந்து வாடும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர், அவரின் குடும்பத்தார், உறவினர்கள் மற்றும் கட்சியின் உடன் பிறப்புகள் அனைவருக்கும் தமிழ் நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துகொள்கின்றோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### தருமபுரி மாவட்டக் கழக முன்னாள் செயலாளர்

# பி.என்.பெரியண்ணனின் 14-ஆம் ஆண்டு நினைவு நாள்! நல உதவிகள்!

## ஆசி.தனபாலன் சார்பில் வழங்கல்!

தருமபுரி, டிச. 23 -

தருமபுரி மாவட்ட முன்னாள் மாவட்டக் கழக செயலாளரும், பென்னாகரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், கழக விவசாயத் தொழிலாளர் துணை தலைவருமான பொறியாளர் பி.என்.பி இன்பசேகரன் மற்றும் தருமபுரி கிழக்கு மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளரும், லோட்டஸ் மெட்ரிகுலேசன் பள்ளி மேலாளரும், தொழில் அதிபருமான மருத்துவர் பி.என்.பி ராஜசேகரன் ஆகியோரின் தந்தையும், தருமபுரி மாவட்டத்திற்கு கலைஞர் ஆட்சியில் தளபதியார் அவர்களின் ஜப்பான் நாட்டு நிதி உதவியுடன் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் பெற்று தந்த தருமபுரி ஒருங்கிணைந்த முன்னாள் மாவட்டச் செயலாளரும் பென்னாகரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான பி.என் பெரியண்ணன் அவர்களின் 14ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி தருமபுரி மாவட்டம், பென்னாகரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, ஏரியூர் ஒன்றியம், பத்தர அள்ளி ஊராட்சியில் தருமபுரி மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளரும், மாவட்டக் கழக பிரதிநிதியுமான ஆரல்குந்தி ஆசி. தனபாலன் சார்பில் ஏழை, எளிய பொது மக்களுக்கும் அந்த பகுதியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கும் நலதிட்ட உதவிகள் வழங்கினார்.

இதில் பெண்களுக்கு சேலை மற்றும் துண்மை பணிக்கான சோப்புகள் மற்றும் கைஉறைகள் மற்றும் ஆண்களுக்கான வேட்டி துண்டு, சட்டை ஆகியவை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பத்திர அள்ளி ஊராட்சி மன்ற துணை தலைவர் கே.பெருமாள் மற்றும் ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் செல்வம்மாள், அப்பாதுரை, மாது, வனிதா, செல்வராஜ், சுமதி அருணகிரி, உதயகுமார், மயிலி மாணிக்கம், வெள்ளையம்மாள் ஆறுமுகம், பத்திர அள்ளி ஊராட்சி கழக முன்னாள் அவை தலைவர் ஏ.சி மாணிக்கம் ஏ.கே. கிருஷ்ணன், எம். சின்னையன்,, ஏ.கே பாலகிருஷ்ணன், பத்திரஅள்ளி ஊராட்சி மன்ற முன்னாள் துணைதலைவர் எம்.அம்மாசி மற்றும் கிளை கழக செயலாளர்கள், வத்தல்பட்டி வி.அழகேசன், ஊத்துப்பள்ளத்தூர் எம். அம்மாசி, வத்தல்பட்டி குடித்தெரு கே.அம்மாசி காட்டுமோட்டூர் சின்னதுரை நாகமலை பூச்சூர் தங்கராஜ், புளியமரத்தூர் எம்.தங்கமணி, அண்ணாநகர் அப்பாதுரை, குழிக்காடு சிலம்பன் புதுக்காடு சேவி, பூவங்காடு கூத்தன், கழக உடன்பிறப்புகள், பி.சின்னசாமி, கே.குமார், ஆ.சிமாதேஸ், கா.யோகேஸ்வரன், ஆர்.குமார், மாதேஸ், ஹரிகரன், தா.சிதம்பரம், வெங்கடாசலம், பன்னீர் செல்வம், மற்றும் திரளானோர் கலந்து கொண்டனர்.




முதல்வர் - கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் இளைஞரணி செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கன மழையினால் பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கு சுமார் 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 24 வகையான அத்தியாவசியப் பொருட்கள் 12 லாரிகளில் இராமநாதபுரம் மாவட்ட கழகத்தின் சார்பாக இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாஷா முத்துராமலிங்கம், வாகனங்களில் அனுப்பி வைத்தார்.



கழக விவசாயத் தொழிலாளர் அணி துணைத் தலைவர் பி.என்.பி.இன்பசேகரன், மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர் பி.என்.பி.ராஜசேகரன் ஆகியோரின் தந்தையும் தருமபுரி மாவட்டக் கழக முன்னாள் செயலாளருமான பி.என்.பெரியண்ணனின் 14 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு துப்புரவு பணியாளர்கள் - ஏழை - எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை ஆசி.தனபாலன் சார்பில் வழங்கப்பட்டது. இதில் கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

### சமூக வலைதளத்தில் பா.ஜ.க. வினர் கம்பு சுத்திக் கொண்டிருக்கிறார்கள்!

# ஒன்றிய அரசின் நிதிப்பகிர்வில் பயங்கர மோசடி!

## நியூஸ் 18 ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில் மார்க்சிஸ்ட் மூத்த தலைவர் கனகராஜ் குற்றச்சாட்டு!

சென்னை, டிச.23 -

“நியூஸ் 18 தொலைக்காட்சி” யில் சொல்லதிகாரம் நிகழ்ச்சியில் பாலவேல் சக்கரவர்த்தியை நெறியாளராகக் கொண்டு ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீட்டில் ஓர வஞ்சனை, வெள்ள பாதிப்பில் அரசியல், பா.ஜ.க. அரசை குற்றம் சாட்டும் தி.மு.க. ஆதாரப்பூர்வ மானதா? அரசியலா? என்ற தலைப்பில் நடைபெற்ற ‘சொல்லதிகாரம்’ விவாத நிகழ்ச்சியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் கனகராஜ் கூறிய ஆணித்தரமான விவாதம் வருமாறு:

முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்கு போய்விட்டார், ‘இந்தியா’ கூட்டத்துக்குப் போய்விட்டார், எனவே நிவாரணப்பணிகள் எல்லாம் கெட்டுப் போச்சு, அவருக்கு இதில் அக்கறை இல்லை என்றெல்லாம் இங்கே பேசுகிறார்கள். சென்னை வெள்ளம் வந்தபோது அதற்கு முந்தைய நாளில் இருந்து முதலமைச்சர் களத்தில் இருந்தார். ஒன்றிய அரசாங்கம் கேட்ட பணத்தைக் கொடுத்தார்களா?

ஏன் இதில் அரசியல்? இது என்ன கேள்வி, அன்றைக்கு முதலமைச்சர் களத்தில் இருந்தார். ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் எடப்பாடி பழனிச்சாமி களத்தில் இல்லை. லேட்டாக வந்தார். நான் வேண்டுமென்றால் சேலன்ஜ் செய்கிறேன். எல்லா செய்தித்தாள்களையும் எடுத்துப் பார்ப்போம். வெள்ளம் உச்சத்தில் இருந்த காலத்தில் முதலமைச்சர் 3-ஆம் தேதி எங்கே இருந்தார், 4-ஆம் தேதி எங்கே இருந்தார், 5-ஆம் தேதி எங்கே இருந்தார், 6-ஆம் தேதி எங்கே இருந்தார் என்பதெல்லாம் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. எடப்பாடி பழனிச்சாமி அந்தக் காலத்தில் எங்கே இருந்தார். பல பத்திரிகைகள் கூட கண்டனம் தெரிவித்தன.

ஒரு முதலமைச்சர் இந்த நேரத்தில் பேசி இருக்க வேண்டாமா? என்று கேட்கிறார்கள். ஆனால் தென் மாவட்டங்களில் மழை வெள்ளம் பாதிப்பின்போது கூட்டத்திற்கு போய் விட்டு வந்தார் என்று இணைப்பது எப்படி சரியாக இருக்கும். இல்லாத விஷயங்களை சொல்லிக் கொண்டு இருப்பதை அவர்கள் வழக்கமாக வைத்து இருக்கிறார்கள்.

இப்போது ஒன்றிய அரசு கொடுத்த பணம் இந்தப் பாதிப்புகள் இல்லை என்றாலும் கொடுத்து இருப்பார்கள். நான் ஒன்றை இங்கே சொல்கிறேன். ஒன்றிய அரசாங்கம் வெளியிட்ட பட்ஜெட் புத்தகம், நிதித் துறை வெளியிட்டது, 2023 பிப்ரவரியில் பக்கம் 16 இல், ஒரு கணக்கு போட்டு இருக்கிறார்கள்.

அதில் மாநிலங்களுக்கு எவ்வளவு ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்று. அதாவது 2023-2024 பட்ஜெட்டில் மாநிலங்களுக்கு எவ்வளவு ஒதுக்கி இருக்கிறோம் என்று ஒரு பட்டியலை வைத்து இருக்கிறார்கள்.

2021-2022 இல் - 7,671 கோடி ரூபாய்,


2022-2023 இல் - 6,400 கோடி ரூபாய்,

2023-2024 இல் - 10,928 கோடி ரூபாய்.

இவை எல்லாம் பொதுவாக கொடுக்கின்றதே தவிர, இப்படி புயல் வந்துவிட்டது, வெள்ளம் வந்துவிட்டது, இவ்வளவு பிரச்சினை இருக்கு, இவ்வளவு பாதிப்பு இருக்கு என்பதெல்லாம் பார்த்து செய்வது இல்லை. இதனை யெல்லாம் பா.ஜ.க. பார்க்க வேண்டும்.

ஹெலிகாப்டர் கொடுத்தோம், சரி, ஆனால் எனக்கு கவலையெல்லாம் என்னவென்றால் 2018 வெள்ளம் போது நான் சேலன்ஞ் செய்கிறேன் கேரளாவிற்கு அரிசி கொடுத்தோம் என்று சொல்லி அரிசிக்கு காசை வாங்கிட்டுப் போய்ட்டாங்க. தேசிய அளவில் கொரோனா பாதிப்பு இருந்தது. அப்போது எல்லாம் வட நாட்டில் இருந்து தான் வந்தார்கள். அவர்கள் போவதற்கு டிக்கெட் செலவை 85 சதவிகிதம் மாநில அரசாங்கம் தான் கொடுத்தது.

கேட்டுப் பெறுவதில் என்ன பிரச்சினை, யாரிடம் யாசகம் கேட்க வேண்டும். என்ன கேட்டு பெற வேண்டும். இது எங்களுடைய உரிமை. நாங்கள் தான் பணம் வசூல் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். என்னுடைய வரிப்பணத்தை கேட்பதில் எவரிடம் யாசகம் பெற வேண்டும்? இது மிகப் பெரிய துரோகம். ஒவ்வொன்றிலும் அவர்கள் அப்படி அடிச்சு இருக்கிறார்கள்.




பிரதம மந்திரி பஷல் யோஜனா என்று ஒரு திட்டம். அதுதான் பயிர் காப்பீட்டுத் திட்டம். 2016-2017-இல் வரை ஒன்றிய அரசாங்கம், 49 சதவிகிதம் மாநில அரசாங்கம் 49 சதவிகிதம், விவசாயி 2 சதவிகிதம், இதுதான் இந்த பிரிமியத்தில் கொடுத்துக் கொண்டு இருந்தார்கள்.

நரேந்திர மோடி 2017-2018-இல் அதனை மாற்றுகிறார். 25 சதவிகிதம் ஒன்றிய அரசாங்கம், 73 சதவிகிதம் மாநில அரசாங்கம், 2 சதவிகிதம் விவசாயி, இதில் தமிழ்நாட்டிற்கு மட்டும் என்ன நட்டம் என்று கேட்டால் 2016-17-இல் 566 கோடி ரூபாய்கொடுத்தது, 2022-23-இல் 2050 கோடி ரூபாய், கிட்டத்தட்ட நான்கு மடங்காக மாறி இருக்கிறது. இந்தப் பணத்தை யார் கொடுக்கிறது?

பிரதமர் வீடு கட்டும் திட்டம் நான் சேலன்ஜ் செய்கிறேன். இவர்கள் யாருமே பேச மாட்டார்கள். கிராமப் புறத்திற்கு ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாய். இந்த தொகையில் வீடு கட்ட முடியாது. அதற்கு ‘மோடி வீடு’ என்று பெயர் வைத்து இருக்கிறார்கள்.

ஆனால் தமிழ்நாட்டில் அதற்கு இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் கொடுக்குறாங்க. வெறும் 72 ஆயிரம் ரூபாய் மட்டும் தான் ஒன்றிய அரசாங்கம் கொடுக்கிறது. பெயர் 60, 40 ஆனால் இப்போது 30, 70 என்கிற சதவிகிதத்தில் தான் இருக்கிறது. இந்த நிதிக்குழு பகிர்வு இருக்கிறதே இதில் பயங்கர மோசடி இருக்கிறது.

13 வது நிதிக்குழு வரை, 1971 மக்கள் தொகை மட்டும் தான் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. நம் மாதிரி குடும்பக் கட்டுப்பாட்டில் முன்னேறிய மாநிலங்களை அடித்து நொறுக்க வேண்டும் என்பதற்காக 2015-இல் அதற்கு 15 சதவிகிதம் கொடுத்து இருக்கிறார்கள்.

வரித் திரட்டல் முயற்சிகளுக்கு இரண்டரை சதவிகிதம். இதன் காரணமாக அந்த வரிப்பங்கீட்டில் தமிழகத்தின் பங்கு 4.96 சதவிகிதமாக இருந்தது. இப்போது 4.079 சதவிகிதம். இதன் காரணமாக மட்டும் ஒரு வருடத்திற்கு தமிழ்நாட்டிற்கு இழப்பு என்று பார்த்தால் 7,268 கோடி ரூபாய். இது போக ஒன்றிய அரசாங்கம், செஸ், சர்சார்ஜ் என்று இந்த அரசாங்கம் வருவதற்கு முன்பாக பத்து சதவிகிதம், அதை பிரித்துக் கொடுக்க வேண்டியதில் இப்போது 24 சதவிகிதம்.

அடுத்து ஆளுநர், ஊரில் சொல்வார்கள், வேலையற்றவர் எருமையைப் பிடித்து ஏதோ செய்து கொண்டு இருந்தார் என்று. ஆர். என்.ரவியின் தனிப்பட்ட பதிவில், திராவிட மாடல் என்று ஒன்றும் இல்லை. அது செத்துப் போய்விட்டது என்கிறார்.

இப்படி சொல்கிறவர் கண்ணியமாக இருக்கிறார் என்று சொல்லிக்கொள்ள வேண்டுமா? ஆளுநரைப் பற்றி சொன்னது உண்மைதான்.

நேபாளில் பூகம்பம் வந்தது. 20 ஆயிரம் ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள் என்று ஆர்.எஸ்.எஸ். நிர்வாகி சமூக வலை தளத்தில்பதிவு செய்கிறார். அவை எல்லாம் எக்ஸ்போஸ் ஆன உடனே, இவை எல்லாம் குஜராத்தில் செய்தது ஆச்சே, ஏன் நேபாளத்தில் என்று சொல்கிறீர்கள் என்று கேட்ட உடனே, ஆமாம், ஆமாம் எங்கள் ஆட்கள் தவறு செய்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். சோஷியல் மீடியாவில் பா.ஜ.க.வினர் கம்பு சுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் கனகராஜ் பேட்டியளித்தார்.

### வெள்ளம் குறைந்ததைத் தொடர்ந்து

# நெல்லை, குமரியில் பேருந்துகள் இயக்கம் தொடங்கியது!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டி!

நெல்லை, டிச. 23 -

நெல்லை மாவட்டத்தில் மழை வெள்ளம் குறைந்ததை தொடர்ந்து நெல்லை, கன்னியாகுமரி மாவட்டத்தில் முழு அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் சாலைகள் பாதிப்படைந்ததால் 55 சதவீதம் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. என போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்தார்.

நெல்லை வண்ணார்பேட்டை அரசு போக்குவரத்து கழக தாமிரபரணி பணிமனையில் மழை வெள்ளநீர் புகுந்து சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல்வேறு தளவாடப் பொருட்கள் சேதம் அடைந்து ள்ளது. இதனை போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். சேத விவரங்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.பின்னர் அமைச்சர் எஸ். எஸ்.சிவசங்கர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

நெல்லை அரசு போக்குவரத்துக் கழக பணிமனைக்குள் வெள்ளநீர் சுமார் 10 அடி உயரத்துக்கு நின்றுள்ளது. இதனால் பணிமனைக்குள் பல்வேறு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.இங்குள்ள நிர்வாக இயக்குனர் நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி,தென்காசி உள்பட 4 மாவட்டங்களில் 10 கோடி ரூபாய் அளவில் சேதம் ஏற்பட்டதாக தெரிவித்துள்ளார். இது குறித்து முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நிதி ஒதுக்கப்படும்.

நெல்லை,கன்னியாகுமரி மாவட்டத்தில் இயல்பு நிலை திரும்பி உள்ளதை தொடர்ந்து அனைத்து பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சாலைகள் சேதம் அடைந்துள்ளதால் தற்போது 55 சதவீதம் பேருந்துகள் இயக்கப்படுகிறது. சாலைகள் சரி செய்யப்பட்டவுடன் முழு அளவில் அங்கு பேருந்துகள் இயக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக நிர்வாக இயக்குனர் மகேந்திரகுமார், பொது மேலாளர் சரவணன், தொ. மு.தர்மன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாநகரப் பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு நெல்லை மாநகர துணைச் செயலாளர் 29 வது வார்டு மாமன்ற உறுப்பினருமான சுதாமூர்த்தி ஏற்பாட்டில் 1500 பேருக்கு அரிசி, போர்வை உள்பட6 வகையான நிவாரணப் பொருட்களை பாளை மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் தச்சை பகுதி செயலாளர் சுப்பிரமணியன், துணை மேயர் ராஜ், வழக்கறிஞர் தினேஷ், துரைப்பாண்டியன், சாய்பாபா உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

# தாமிரபரணியில் தணிந்தது வெள்ளம்!

திருநெல்வேலி, டிச. 23 -

திருநெல்வேலியில் கடந்த 5 நாட்களாக தாமிரபரணியில் பெருக்கெடுத்த வெள்ளம் நேற்று முன்தினம் தணிந்தது. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங் களில் கடந்த 17, 18ம் தேதிகளில் கொட்டித் தீர்த்த அதி கனமழையால் பல்வேறு இடங்களை வெள்ளம் சூழ்ந்தது.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக தாமிரபரணி ஆற்றில் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து வெள்ளம் தணிந்துள் ளது. இதனால் ஆற்றங்கரையோர கோயில்களின் கோபுரங்கள் வெளியே தலைகாட்டியிருக்கின்றன. இதுபோல் ஆற்றங்கரையோர மண்டபங்களும் வெளியே தெரிகின்றன. ஆறு பெருக்கெடுத்து வழிநெடுக, கரையோரங்களில் துணிமணிகள், பிளாஸ்டிக் பைகள் உள்ளிட்டவை மரங்களை போர்த்தியிருக்கின்றன.




திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை பேரூராட்சி மற்றும் வடமதுரை பேரூர் தி.மு.க. சார்பில் இரண்டு லட்சம் மதிப்புள்ள நிவாரணப் பொருட்களை மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென்மாவட்ட மக்களுக்கு 20.12.2023 அன்று வாகனம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது, வடமதுரை நகரச் செயலாளரும் 14 வது வார்டு கவுன்சிலருமான எஸ். கணேசன் வாகனத்தை கொடி அசைத்து துவக்கி வைத்தார், செயல் அலுவலர் கல்பனாதேவி, பேரூராட்சி தலைவர் நிருபாராணி கணேசன், துணைத் தலைவர் மலைச்சாமி கிளர்க், வார்டு கவுன்சிலர்கள் சுப்பிரமணி, தேன்மொழி, சௌந்திரராஜ், பேரூர் கழக நிர்வாகிகள் வீரமணி, அழகு மலை, முரளிதராஜன் மற்றும் வார்டு கழக செயலாளர் கலந்து கொண்டனர்.

# வருந்துகிறோம்!



தி.மு.க. இளைஞர் அணி துணைச் செயலாளர்

**தூத்துக்குடி எஸ்.ஜோயல் B.A., B.L.,**

*அவர்களின் தாயார்*

## திருமதி. எஸ்.எஸ்தர் அவர்கள்

( 20.12.2023, புதன்கிழமை அன்று இயற்கை எய்தினார். )

அன்புத் தாயாரை இழந்து வாடும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

**தி.மு.க. இளைஞர் அணி**

‘பசுமை சைதை’ சார்பில் புயல் காரணமாகச் சேதமடைந்த மரங்களுக்கு ஈடாக

# 5000 மரக்கன்றுகளை நடும் பணி ; பருவத்தே பயிர் செய்யும் முயற்சி!

## சமூக வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!





**சென்னை, டிச. 23–**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:**

காலநிலை மாற்றத்தை உலகளாவிய கூட்டு நடவடிக்கையின் வழியாக மட்டுமே எதிர்கொள்ள முடியும். அதுவே தீர்வாகும்!

இந்த விழிப்புணர்வுடன், ஆறு ஆண்டுகளுக்கு முன்பே என்னால் தொடங்கி வைக்கப்பட்டு, 1 லட்சத்து 10 ஆயிரம் மரங்களை நட்டுப் பராமரித்து வரும் பசுமை_சைதை சார்பில் Cyclone Michaung காரணமாகச் சேதமடைந்த மரங்களுக்கு ஈடாக 5000 மரக்கன்றுகளை நடும் பணி ‘பருவத்தே பயிர் செய்யும்’ முயற்சி!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களை இரண்டாம் முறையாக அண்ணாநகர் டவர் கிளப் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள கழக அயலக அணியின் தலைவரும் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் கலாநிதி வீராசாமி, இந்த கிளப்பின் மற்ற நிர்வாகிகளான துணைத் தலைவர் பாலசுப்பிரமணியன், செயலாளர் வரதராஜன், துணைச் செயலாளர் ரவி, பொருளாளர் செல்வம் மற்றும் டவர் கிளப் உறுப்பினர் ஆசைத்தம்பி ஆகியோர் சந்தித்து மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அண்ணாநகர் டவர் கிளப் சார்பில் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு 20 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினர்.

146 எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டதற்குக் கண்டனம்!

# டெல்லி ஜந்தர் மந்தரில் “இந்தியா” கூட்டணிக் கட்சிகள் போராட்டம்!

## மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, சீதாராம் யெச்சூரி, திருச்சி சிவா பங்கேற்பு!

டெல்லி, டிச. 23-

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்கள் 146 பேர் இடைநீக்கம் செய்யப்பட்ட விவகாரத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, டெல்லி ஜந்தர் மந்தரில் இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் போராட்டம் நடைபெற்றது.

நாடாளுமன்ற கூட்டம் நடைபெற்று கொண்டிருந்தபோது, திடீரென 2 பேர் உள்ளே புகுந்து புகைக் குண்டுகளை வீசினர். நாட்டின் ஜனநாயகத்தின் உறைவிடமாக கருதப்படும் நாடாளுமன்றத்துக்குள் புகுந்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் அங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பலத்த கேள்வியையும் சந்தேகத்தையும் எழுப்பியுள்ளது. இதையடுத்து இந்த விவகாரம் குறித்து ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா விரிவான விளக்கம் அளிக்கக்கோரி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர்ந்து வலியுறுத்தினர். அவர்களின் இந்த நியாயமான கோரிக்கையை அமித் ஷாவோ, ஒன்றிய அரசோ ஏற்கவில்லை. மேலும் நாடாளுமன்ற இரு அவைகளைச் சேர்ந்த எதிர்க்கட்சி எம்பிக்கள் 146 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டனர். இதைக் கண்டித்து, டெல்லி ஜந்தர் மந்தரில் இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்தில் பேசிய காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல் காந்தி, 146 எம்.பி.க்களை இடைநீக்கம் செய்ததன் மூலம், அவர்களை நாடாளுமன்றத்துக்கு தேர்வு செய்த கோடிக்கணக்கான மக்களை ஒன்றிய பா.ஜ.க. அரசு அவமதித்து விட்டதாக குற்றம்சாட்டினார்.

ராகுல் காந்தி காங்கிரஸ் முன்னணி தலைவர் நரேந்திர மோடியின் ஆட்சியில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பே இல்லை. சமீபத்தில் எடுக்கப்பட்ட சர்வேயில் நாட்டின் இளைஞர்கள் ஒரு நாளின் ஏழரை மணிநேரத்தை கைபேசியில் செலவிடுகின்றனர் என தெரியவந்துள்ளது.

இதற்கு என்ன காரணம், நாட்டின் இளைஞர்களின் வேலைவாய்ப்பு பறிக்கப்பட்டுள்ளது. நமது ஊடக நண்பர்களும் ஆளுங்கட்சிக்கு ஆதரவாகவே செய்திகளை வெளியிடுகின்றனர்.

போராட்டத்தில் பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, நாடாளுமன்றத்தில் பேச அனைத்து எம்.பி.க்களுக்கும் சம உரிமை அளிக்கப்பட்டுள்ளதென்றும், ஆனால் நோட்டீஸ் அளித்தும் தங்களுக்கு பேச வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்றும் குற்றம் சாட்டினார். தலித் எம்.பி.க்களை பேச ஒன்றிய பா.ஜ.க. அரசு அனுமதிக்காதது ஏன் என்றும் கேள்வி எழுப்பினார். எதிர்க்கட்சி எம்.பி.க்களை இடைநீக்கம் செய்துவிட்டு, சர்ச்சைக்குரிய மசோதாக்களை ஒன்றிய அரசு ஒருமனதாக நிறைவேற்றி விட்டதாகவும் கார்கே விமர்சித்தார்.

இந்தியா கூட்டணி ஏற்பட காரணமே நாட்டின் ஜனநாயகத்தை அடியோடு அழிக்க நினைக்கும் பிரதமர் மோடியும், அமித்ஷாவும் தான்.அவையில் சமஉரிமை என்ற பேச்சுக்கே இடமில்லை. உறுப்பினர்களுக்கு பேசுவதற்கு உரிமை அளிக்கப்படாவிட்டால் பிரச்சினைகளுக்கு எப்படி தீர்வு காண்பது.மோடியை ஆட்சியில் அமரவைத்த மக்களுக்கு அவரை எப்படி கீழே இறக்குவது என்பது குறித்தும் தெரியும் என்றும் கார்கே தெரிவித்தார்.

இந்த போராட்டத்தில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், தி.மு.க. மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொது செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் டி.ராஜா உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.




திண்டுக்கல் மாவட்ட நிர்வாகம் மற்றும் கிழக்கு, மேற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென் மாவட்ட மக்களுக்கு ரூ.4கோடி மதிப்பிலான நிவாரணப் பொருட்களை அமைச்சர்கள் இ.பெரியசாமி, அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் ஆகியோர் அனுப்பி வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி உள்ளார்.

திண்டுக்கல் மாவட்ட நிர்வாகம், கிழக்கு - மேற்கு மாவட்டக் கழகங்கள் சார்பில்

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ரூ. 4 கோடியில் நிவாரணப் பொருட்கள்!

## அமைச்சர்கள் இ.பெரியசாமி - அர.சக்கரபாணி அனுப்பி வைத்தனர்!

திண்டுக்கல், டிச. 23 -

திண்டுக்கல் மாவட்ட நிர்வாகம் மற்றும் கிழக்கு மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மழை வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட தென் மாவட்ட மக்களுக்கு ரூ.4 கோடி மதிப்பிலான நிவாரண பொருட்களை அமைச்சர்கள் இ.பெரியசாமி. அர.சக்கரபாணி ஆகியோர் கொடியசைத்து அனுப்பி வைத்தனர். தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ள நிலையில் தென்மாவட்டங்களான நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென் காசி ஆகிய மாவட்டங்கள் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் வாழ்வாதாரம் இழந்து தவிக்கின்றனர். குறிப்பாக அவர்களுக்கு அன்றாட அத்தயாவசிய பொருட்கள் கிடைப்பதில் ஏற்பட்டுள்ளது. இதனால் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென் மாவட்டங்களில் உள்ள பொதுமக்களுக்கு தங்களால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டும் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டு கோள் விடுத்திருந்தார்.

இதையடுத்து மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென்மாவட்ட பொதுமக்களுக்கு உதவும் வகையில் திண்டுக்கல் திமுக கிழக்கு, மேற்கு மாவட்டம் சார்பில் ரூ.2 கோடியே 22 லட்சம் மதிப்பிலான நிவாரண பொருட்கள் மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் ரூ.1 கோடியே 78 லட்சம் மதிப்பிலான நிவாரண பொருட்கள் சேகரிக்கப்பட்டன. இதில் தண்ணீர் பாட்டில்கள், அரிசி, சமையல் எண்ணெய், பருப்பு வகைகள், பாய், கைலி, நைட்டி, நாப்கின், சேலை போர்வை போன்ற அத்தியாவசிய பொருட்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவை அடங்கும் இந்த 27 நிவாரண பொருட்கள் 27 லாரிகளில் அனுப்பி வைக்கும் நிகழ்வு திண்டுக்கல் கலெக்டர் அலுவலகம் அருகே நடைபெற்றது நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் பெரியசாமி உணவு மற்றும் உணவுப் பொருள் வழக்குகள் துறை அமைச்சர் அரசமணி கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பி. செந்தில் குமார் எம்.எல்.ஏ. ஆகியோ கலந்து கொண்டு கொடியை சேர்த்து லாரிகளை பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர் அமைச்சர் இ.பெரியசாமி செய்தியாளர்களிடம் பேசுகையில், ‘தென் மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என தமிழக முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதன் அடிப்படையில் திண்டுக்கல் மாவட்ட நிர்வாக கிழக்கு மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பிலும் முதல் கட்டமாக நிவாரண பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டது மேலும் தொடர்ந்து நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்படும் என்றார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாவட்ட செயலாளரும், செந்தில்குமார் எம் எல்.ஏ, கலெக்டர் பூங்கொடி. இயக்குனர் திலகவதி, டி.ஆர்.ஓ ஷேக் முகைதீன், துணை மேயர் ராஜப்பா, மாவட்ட பொருளாளர் சத்திய மூர்த்தி, மாவட்ட கவுன்சிலர் விஜயன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, மாநகர பொருளாளர் சரவணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி மாவட்டத்தில் இயல்புநிலை திரும்புகிறது!

## இரயில் - பேருந்து சேவைகள் மீண்டும் தொடங்கின!

தூத்துக்குடி, டிச. 23-

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்தில் மெல்ல மெல்ல இயல்புநிலை திரும்பி வருகிறது. ரயில் மற்றும் பேருந்து சேவைகள் தொடங்கப்பட்டு உள்ளன.

தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் பெய்த அதிகனமழையின் காரணமாக பல்வேறு இடங்களில் மழை வெள்ளம் தேங்கியது. அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கையால் கன்னியாகுமரி, நெல்லை, தென்காசி மாவட்டங்களில் இயல்புநிலை திரும்பியுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் பல இடங்களில் தண்ணீர் வடிந்துள்ள நிலையில் ஒருசில இடங்களில் உள்ள தண்ணீரை வெளியேற்ற அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுத்து உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி மற்றும் நெல்லை மாவட்டங்களில் மழை பாதிப்புகளை பார்வையிட்டு மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளை துரிதப்படுத்த உத்தரவிட்டார். இந்நிலையில் தூத்துக்குடியில் பெரும்பாலான இடங்களில் தண்ணீர் வடிந்ததை அடுத்து மீண்டும் ரயில் போக்குவரத்து தொடங்கியுள்ளது. சென்னையில் இருந்து நேற்று முன்தினம் புறப்பட்டு சென்ற முத்துநகர் உள்ளிட்ட பல்வேறு ரயில்கள் நேற்று தூத்துக்குடி வரை இயக்கப்பட்டன.

திருச்செந்தூர், கோவில்பட்டியில் இருந்து பிற இடங்களுக்கு பேருந்துகள் இயக்கப்பட்டன. தூத்துக்குடியில் கடைகள் திறக்கட்டப்பட்டதால் இயல்பு நிலை திரும்புகிறது

முக்கிய சாலைகளில் தேங்கியிருந்த மழைநீர் வடிந்து இருப்பதால் பேருந்துகள் சேவையும் தொடங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி, திருச்செந்தூர், கோவில்பட்டி உள்ளிட்ட இடங்களில் இருந்து பிற மாவட்டங்களுக்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதேப்போல் நகரில் ஒரு சில பகுதிகளில் கடைகள் திறக்கப்பட்டுள்ளதால் தூத்துக்குடியில் மெல்ல மெல்ல இயல்புநிலை திரும்பி வருகிறது.

தூத்துக்குடியில் அதி கனமழையால் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் இருந்த பொதுமக்கள் உடனடியாக மீட்கப்பட்டு அரசின் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர் உள்ளிட்ட வசதிகளை அரசு செய்து கொடுத்துள்ளது. தங்கள் வீடுகளில் தண்ணீர் புகுந்தாலும் நிவாரண முகாம்களில் தங்குவதற்கு ஏற்பாடு செய்து மூன்று வேளையும் தரமான உணவு வழங்கி உடைகளும் வழங்கிய அரசுக்கு பொது மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

தூத்துக்குடி ஏரல் பகுதியில் - அமைச்சர்

# உதயநிதி ஸ்டாலின் நிவாரண உதவிகள் வழங்கினார்!

## மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்த அதிகாரிகளுக்கு உத்தரவு!

தூத்துக்குடி, டிச. 23-

தூத்துக்குடியில் மழை வெள்ளம் பாதித்த பகுதிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு மீட்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தினார். மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளையும் அவர் வழங்கினார்.

தூத்துக்குடியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. மழை பாதித்த பகுதிகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் பார்வையிட்டு ஆய்வு செய்து மீட்பு பணிகளை துரிதப் படுத்தினார். இந்நிலையில் மழை பாதிப்பு ஏற்பட்டது முதல் தூத்துக்குடியில் பல்வேறு பகுதிகளை ஆய்வு மேற்கொண்டு மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத் திய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று ஏரல் பகுதியில் மழை பாதிப்புகளை பார்வையிட்டார். மழையால் இடிந்து விழுந்த வீடுகளையும் அவர் பார்வையிட்டார். மீட்பு நடவடிக்கைகள் துரிதப் படுத்துமாறு அவர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

நிவாரண முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு அமைச்சர் உதயநிதி ஆறுதல் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளையும் வழங்கினார்

இதைத்தொடர்ந்து மழையால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை அவர் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். தொடர்ந்து மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.






தூத்துக்குடி குடியிருப்பு பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

# உடன்பிறப்பே... 37

**தி.மு.க. என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த பெங்களூர் கி.சோழன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**




# பெங்களூர் கி.சோழன் : எல்லை தாண்டி கழகம் வளர்த்தவர்!

*1958* ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் பெங்களூருவில் கர்நாடக மாநில தி.மு.கழக மாநாடு நடைபெற்றது. கர்நாடக மாநில அரசியல் வரலாற்றில் இத்தகையதொரு மாநாட்டை அந்த மாநில மக்கள் கண்டிருக்க மாட்டார்கள் எனும்படி அந்த மாநாடு நடைபெற்றது. அந்த மாநாடு சிறப்பாக நடைபெற்றதற்கு கர்நாடக மாநிலக் கழக முன்னோடிகள் பலரும் உழைத்தனர். அதில் 26 வயது இளைஞராகக் கலந்துகொண்டு ஆக்கமுடன் செயல்பட்டவர் கி.சோழன்.

அந்த மாநாட்டுக்கு முன்னர் 1953 ஆம் ஆண்டில், கர்நாடக மாநிலக் கழகத்தின் முதல் மாநாடு சிறப்பாக நடைபெற்றபோது, அந்த மாநாட்டின் விளம்பரக் குழுச் செயலாளராகப் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றியவர் சோழன். அப்போது இந்த உடன்பிறப்பின் வயது 21. அந்த இளம் வயதில் அரசியல் ஆர்வமும், செயல்களும் குறிப்பாக, திராவிட இயக்கச் சிந்தனை மரபும் அவர் கொண்டிருந்தது வியப்பானதுதான்.

கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூர் மாநகரத்தைச் சார்ந்த திருவாளர் அப்பாவு - அம்மு ஆகியோருக்கு மகனாக, 1932 ஆம் ஆண்டு பிறந்தவர் சோழன். பள்ளி இறுதிவரை படித்த இவர், தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கல்வியை ஆழ்ந்து பயிலத் தொடங்கினார்.

## கர்நாடகத்தை முன்மொழிந்தவர்

பேரறிஞர் அண்ணர் அவர்கள் தி.மு.கழகம் தொடங்கியபோதே மாணவர் பருவத்தில் இருந்த சோழன், கழகத்தில் உறுப்பினராகித் தொண்டாற்றத் தொடங்கினார். இவர் கழகத்தில் தீவிரமாகப் பணியாற்றிய காரணத்தால் பெங்களூர் மாநகர மாவட்டத் துணைச் செயலாளர் பொறுப்பேற்றுச் செயல்பட்டார்.

கழகத்தின் தொடக்கக் காலங்களில், கர்நாடக மாநில தமிழர்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்தியது. தமிழ்நாட்டின் எல்லைக்கு வெளியே கழகம் வேகமாக வளர்ந்த மாநிலமாக மைசூர் மாநிலம் இருந்தது. அந்த மாநிலத்தை ‘கர்நாடகம்’ என பெயர் மாற்ற வேண்டும் என்கிற கோரிக்கைகூட கழக மாநாட்டில் தீர்மானமாக நிறை வேற்றப்பட்டுள்ளது. 1958 ஆம் ஆண்டு நடந்த மாநாட்டில் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவர் சோழன் என்பது குறிப்பிடத்தக்கது.

“மொழி - கலை- பண்பாட்டால், பொருளாதாரப் பிணைப்பால் தென்னகத்தோடு ஒன்றுபட்ட கர்நாடகத்தை, ஐந்து மண்டலங்களில் ஒன்றான மேற்கு மண்டலத்தோடு சேர்த்திருப்பதை வன்மையாகக் கண்டிப்பதுடன், உடனடியாக தென்மண்டலத்தோடு இணைக்க வேண்டுமென்று ஒன்றிய அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்துகிறது” - கழக மாநாட்டின் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவர் 26 வயதேயான கி.சோழன் என்கிறது நமது வரலாறு.

## பெங்களூருவில் கழக அரசியல்

கழகம் தொடங்கப்பட்ட காலங்களில் தீவிரமாகச் செயல்பட்டு வந்த சோழன், கர்நாடகாவில் கழகத்தின் முதல் மாநில மாநாட்டில் தீவிரமாகப் பணியாற்றிய காரணத்தால் பெங்களூர் மாநகர மாவட்டத் துணைச் செயலாளர் பொறுப்பினை வழங்கினார் அண்ணா.

கர்நாடக மாநில அமைப்பாளர் திராவிடமணி அவர்களுடன் இணைந்து, கழக வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர். கர்நாடக மாநிலத்தில் கழகத்தை நடத்திச் சென்ற முன்னணித் தோழர்களில் இவரும் ஒருவர் என்பது பெருமைக்குரிய செய்தியாகும். எஸ்.வி.பதி, தி.திராவிடமணி, எஸ்.ஜே.உசேன் ஆகியோருக்கு நிகராக 1960 காலகட்டங்களில் பெங்களூருவில் கழக அரசியல் பணிகளைச் செய்தவர் சோழன்.

1960 ஆம் ஆண்டுவாக்கில் திராவிட மணி கர்நாடக மாநிலப் பொறுப்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர் அவருடன் இணைந்து களப்பணியாற்றத் தொடங்கினார். தந்தை பெரியாரின் தொண்டராக அரசியல் பயணத்தைத் தொடங்கிய சோழன், பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பிமார்களில் ஒருவராக இணைந்து விளங்கினார். அதன் பிறகு முத்தமிழறிஞர் காலத்தில் அவரின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் நெருக்கமான உடன்பிறப்பாக முன் நின்றவர். இளைஞர்போல இயக்கப் பணியாற்றிய எளிமையான தோழர் கி.சோழன்.

## சுயமரியாதை மறுமண கலப்புத் திருமணம்

கர்நாடக மாநில பொறுப்பாளராக இருந்த திராவிட மணி அவர்கள் 1983 ஆம் ஆண்டில், வயதுமூப்பு காரணமாக கட்சிப் பதவியில் இருந்து விலகியதை அடுத்து, கழகத்தின் அடுத்த தலைமுறைக்கு வழிவிட்டார். 1984 ஆம் ஆண்டில் இருந்து சோழன் பொறுப்பாளராக இருந்து கர்நாடக கழகத்தினை முன்னெடுத்துச் சென்றார்.

தந்தை பெரியாரின் பகுத்தறிவு, சுயமரியாதைக் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்ட சோழன், பெங்களூருவில் கலப்பு மணம் செய்பவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பவராகத் திகழ்ந்தவர். ஏனென்றால், சோழன் தனது கலப்புத் திருமணத்தையே சுயமரியாதைத் திருமணமாக நடத்திக் காட்டியவர்.

தனது சொந்தச் சமூகம் அல்லாத கைம்பெண் ஒருவரைக் கைப்பிடித்து அண்ணா அவர்கள் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர் சோழன். திருமணத்தை நடத்தத் திட்டமிட்ட நேரத்தில் அண்ணா சென்று சேரமுடியாமல், அன்று மாலைதான் சேர்ந்தார். அண்ணாவின் வருகைக்காகக் காத்திருந்த சோழன் அவரை ஆரத்தழுவி வரவேற்று, திருமண நிகழ்வினை முடித்திருக்கிறார்.

தமக்குப் பிறந்த பெண் குழந்தைகளுக்கு மலர்விழி, பொற்கொடி, செந்தாமரை என்று தமிழ்ப் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தார். தனக்குப் பிறந்த ஆண் குழந்தைக்கு அண்ணாவுக்குப் பின் கழகத்தைக் கட்டிக் காத்த நமது அன்புத் தலைவர் கலைஞர் அவர்களின் திருப்பெயரைச் சூட்டிப் பெருமை கொண்டார்.

> **“கழக இலட்சியம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக அறப்போர்க் களத்தில் முதல் பலியாக நான் இருப்பேன் என்று இரத்தக் கையெழுத்துப் போட்ட தோழர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது”.**

## குருதிக் கையெழுத்து

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டவர், காவல் துறையால் கைது செய்யப்பட்டு வழக்கும் தொடுக்கப்பட்டு தண்டனை பெற்றுப் பலமுறை சிறையில் அடைக்கப்பட்டார். குறிப்பாக, 1986 ஆம் ஆண்டு தலைமைக் கழகம் அறிவித்த அரசியல் சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தை இவர் தலைமையேற்று வெற்றிகரமாக நடத்தினார். இதனால் காவல்துறை வழக்குப் போட்டு இவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது.

காவிரி நீர் உரிமைப் போராட்டங்களின் போது இரண்டு மாநிலங்களுக்கிடையிலான பதற்றங்களின்போது மக்களின்பக்கம் நின்று கவனமாகக் கையாண்டுள்ளார். கழகம் நடத்திய ஈழத்தமிழர் போராட்டங்கள் என பலவற்றிலும் சோழன் முன்நின்றவர், 2001 ஆண்டு ஏப்ரல் மாதம் இயற்கை எய்தினார். கழகத்தின் வர லாற்றில் அவரது பங்களிப்பினைப் பெருமைப்படுத்தும் விதமாக 1997 ஆம் ஆண்டிலேயே முப்பெரும் விழாவில் அண்ணா விருதினை அளித்து மதிப்பு செய்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அப்போது தலைமைக் கழகம் வெளியிட்ட குறிப்பில் இதை எழுதினார் கலைஞர், “இளைஞர்போல இயக்கப்பணி ஆற்றிவரும் எளிமையான தோழர் கி.சோழன். கழக வரலாற்றின் ஒரு கட்டத்தில், கழக இலட்சியம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக அறப்போர்க் களத்தில் முதல் பலியாக நான் இருப்பேன் என்று இரத்தக் கையெழுத்துப் போட்ட தோழர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது”. அவரது எழுத்துகள் குறிப்பிடுவதுபோல நமது முன்னோடிகள் இரத்தக் கையெழுத்து மட்டும் போடவில்லை. கழகத்துக்காக தங்கள் இன்னுயிரையே ஈந்துள்ளனர். அந்தத் தியாகங்களின் அடர்த்தி, கழகத்தின் கறுப்பு சிவப்பு வண்ணங்களில் உயிராகக் கலந்திருக்கும்.

## கண்ணீரின் விலை!

மல்யுத்த வீராங்கனைகள் பா.ஜ.க. எம்.பி. பிர்ஜ் பூஷன் சிங் மீது பாலியல் குற்றச்சாட்டுக்களை முன் வைத்துப் போராட்டம் நடத்தி வந்தார்கள். அவர் மீது எந்த நடவடிக்கையையும் ஒன்றிய அரசு மேற்கொள்ளவில்லை.

இந்நிலையில், பிர்ஜ் பூஷனின் ஆதரவாளர் சஞ்சய் சிங் என்பவர் இந்திய மல்யுத்தப் பேரவையின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அதைத் தொடர்ந்து, மல்யுத்த வீராங்கனை சாக்ஷி மாலிக், மல்யுத்தப் போட்டியிலிருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.

2016 ரியோ ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றதன் மூலம், மல்யுத்த விளையாட்டுப் போட்டிப் பிரிவில் முதல் பதக்கக் கணக்கைத் தொடங்கி வைத்தவர்தான் இந்த சாக்ஷி மாலிக். ஆனால், பிர்ஜ் பூஷன் மீது அவர் வைத்த புகார்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாததன் மூலம், சாக்ஷியை மட்டுமல்ல, மல்யுத்த விளையாட்டை விளையாடும் வருங்காலத் தலைமுறை வீரர்கள் அத்தனை பேரையும் தோல்வி அடையச் செய்திருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

களத்தில் எதிராளியைத் தூக்கிப் போடும் இந்த வீரர்களின் கண்ணீருக்கு, பா.ஜ.க.வின் ஆட்சியைத் தூக்கி எறிந்து விலையாகக் கொடுப்பார்கள் மக்கள். அதையும் இந்த நாடு பார்க்கத்தான் போகிறது!

## :.ப்ளாஷ்பேக்



### அலுவலகத் திறப்பும் வாழ்த்தும்!

1994 ஆம் ஆண்டு கழகம் எதிர்க்கட்சியாக இருந்தது. அப்போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, நான் பணியாற்றிக் கொண்டிருந்த சென்னை வளர்ச்சிக் கழக அலுவலகத் திறப்பு விழாவுக்கு வருகை தந்து அலுவலகத்தைத் திறந்து வைக்கும்படி தேதி கேட்டிருந்தேன். பாரிமுனையில் ஒய்.எம்.சி.ஏ. கட்டடத்தில் அமைந்திருந்த அந்த அலுவலகத்தை கலைஞர், ஆற்காட்டார் மற்றும் துரைமுருகன் உள்ளிட்ட தலைவர்கள் நேரில் வந்து திறந்து வைத்தார்கள். அப்போது தலைவர், என்னிடம் சில நிமிடங்கள் உரையாடிவிட்டு வாழ்த்தவும் செய்தார்.


சம்பத்

**-வி.ஆர்.எஸ்.சம்பத்,
சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### வர்த்தக மையம்

**2001 ஆம் ஆண்டு, ஜனவரி 31 ஆம் தேதி, சென்னை நந்தம் பாக்கத்தில் சென்னை வர்த்தக மையம் திறக்கப்பட்டது. அந்த வர்த்தக மையத்தினை சென்னையில் அமைப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டு, அதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டவர் ஒன்றிய அமைச்சராக இருந்த முரசொலி மாறன். வர்த்தக மையத்துக்காக 25 ஏக்கர் நிலம் ஒதுக்கியவர் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 337




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.